1410

Regis. No M 2147

# THE AGRICULTURIST

*A monthly Journal devoted to Agriculture and its allied subjects*

# கிருஷிகன்

ஓர் மாதாந்தர விவசாயப் பத்திரிகை

OFFICE OF THE ... 20 JUN 1929 MADRAS


| | | |
|---|---|---|
| Vol XII<br>புஸ்தகம் 12 | 1929ம் ஸு ஜூன்மீ 14உ<br>சுக்கிலஸு ஆனிமீ 1உ | No 3<br>பிரதி 3 |


CONTENTS PAGE


Government of India's decision on Linlithgou report of the Royal Agricultural Commission 51

Clearance of doubt in correspondence 61

Cattle 66

Correspondence 72

Silk cotton seeds avaialable 79

Almanack 80


பொருளடக்கம் பக்கம்


ராயல் விவசாய கமிஷன் ரிபோர்ட்டின் பேரில் இந்தியா கவர்மெண்டார் செய்திருக்கும தீர்மானஙகள 51

கடிதவினு சந்தேகம மாற்று 61

மாடுகளும் அவைகளின் பாதுகாப்பும் 66

கடிதம் 72

இலவம்பஞ்சுவிதைகள்தயார் 79

பஞ்சாஙகம் 80



EDITOR RAO BAHADUR J. CHELVARANGA RAJU

Jagannadha Baugh Saidapet

Annual Subscription including Postage Re oneonly


Copy Right Registered

## The Journal of the Madras Agricultural Students Union

A Monthly Journal in English devoted to the Study of Improved Agriculture. Articles of Scientific and general interest are published along with Extracts & reviews from various Journals both Indian & foreign. Subscription per annum Rs. Four. Single copy as Six.

Apply to Manager M. A. S. U. Journal
AGRICULTURAL COLLEGE, LAWLEY ROAD P. O.
Coimbator.

## இந்திய விவசாயம்

ஓர் விவசாய மாதப் பத்திரிகை

வருட சந்தா ரூ. 1

இதில் கமத்தொழில், கால்நடை பரிபாலனம், கூட்டுறவு சிறு தொழில்கள் முதலிய கிருஷிகருக்கு வேண்டிய சகல விஷயங்களும் பிரதிமாதமும் வெளிவரும் [தனிசஞ்சிகை அணா ஒன்றரை]

மானேஜர்—இந்திய விவசாய ஆபீஸ்
தெப்பக்குளம் போஸ்டு திருச்சி.

## கர்மபாலன்

தமிழ் மாதப்பதிப்பு

தென்னாட்டில் சம்ம ஜாதியப் பத்திரிகை இஃதொன்றே. கிராமவாசிகளுக்கு உசிதமான பொது விஷயங்கள் வெளிவரும். விளம்பரங்களுக்குத் தக்க சௌகரியமுண்டு! வருடசந்தாரூ 1 தான்

ஐக்கிய சங்கங்களுக்கும் பஞ்சாயத்துகளுக்கும் வேண்டிய புத்தகபாரங்கள் எம்மிடம் கிடைக்கும்:

ஆர். வெங்கடசாமி நாயுடு
பத்திராதிபர் கர்மபாலன்
திருத்தங்கல்



Printed and Published by J. R. Rangaraju at the Raju Press "Jaganatha Baugh" Saidapet Madras.

OFFICE OF THE ... 20 JUN 1929 MADRAS

Regis. No M 2147

# THE AGRICULTURIST

*A monthly Journal devoted to Agriculture and its allied subjects*

# கிருஷிகன்

ஓர் மாதாந்தர விவசாயப் பத்திரிகை

Vol XII புத்தகம் 12 | 1929ம் ஹு ஜூன்மீ 14உ சுக்கில ஹு ஆனிமீ 1உ | No : 3. பிரதி 3.

## Goverment of India's decision on Linlithgou report of the Royal Agricultural Commission

## ராயல் விவசாய கமிஷன் ரிபோர்ட்டின் பேரில் இந்தியா கவர்ன்மெண்டார் செய்திருக்கும் தீர்மானங்கள்.

இந்திய விவசாய அபிவிருத்தி விஷயமாய் சீர்திருத்தங்கள் செய்யுமுன் தற்காலம் நமது கிருஷிகர் இருக்கும் பரிதாபகரமான நிலைமையிலிருந்து எவ்வாறு நிவர்த்தித்து நல்ல ஸ்திதிக்குக் கொண்டு வரக்கூடுமென்ற விஷயத்தை விசாரித்தறிவதற்காக ஒரு ராயல் விவசாய கமிஷன் நமது ராஜப் பிரதிநிதி அவர்களின் முயற்சியால் நியமிக்கப்பட்ட விஷயத்தைப் பற்றியும் அவர்கள் சென்னை ராஜதானியிலும் மற்ற மாகாணங்களிலும் சுற்றுப்பிரயாணம் செய்து தங்களுடைய விசாரணையை இந்தியாவில் அநேக இடங்களில் முடித்துக் கொண்டு இங்கிலாந்துக்குப் பிரயாணமாகிப் போனார்கள் …ம் அவர்கள் தீர்மானங்களையும் சிபார்சு செய்த விஷயங்களையும் சேர்த்து ஆயிரம் பக்கங்களுக்கு மேல் அச்சிட்டு வெளியிட்டிருக்கிறார்களென்றும் விபவ வருஷம் ஆடிமாதம் பிரசுரித்த கிருஷிகனில் நாம் எழுதியிருந்ததை நமது சந்தா நேயர்கள் எல்லோரும் படித்திருப்பார்கள். இந்த ரிபோர்ட்டின் பேரில் இந்திய கவர்ண்மெண்டார் நாளது வருஷம் மேமாதம் 23ம் தேதி சில தீர்மானங்களைச் செய்திருக்கிறார்கள். அதன் சாராம்சம் இதனடியில் குறிக்கப்பட்டிருக்கிறது:—

ராயல் விவசாய கமிஷனர்கள் எழுதிய ரிப்போர்ட்

டின் 9வது அதிகாரத்தில் இத்தேசத்தில் விவசாய விஷயமாய்ச் செய்த ஆராய்ச்சிகளும் சோதனைகளும் இன்னமும் அதிக பால்ய திசையில் இருக்கிறதென்றும் நிருபண விஷயத்திற்காகவும் அபிவிருத்திகளைப் பரவச் செய்யும் விஷயத்திற்காகவும் இத்தேசத்தில் செய்திருக்கும் ஏற்பாடுகள் எவ்வளவு நன்றாய் ஏற்படுத்தப்பட்டிருந்த போதிலும் அவைகள் விவசாய விஷயங்களில் செய்த ஆராய்ச்சிகளின் ஆதாரத்தின்மேல் ஸ்தாபிக்கப்படாவிட்டால் அம்முயற்சியினால் பூரண பலனும் சித்தியும் கிடைக்காதென்றும் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். மேலும் விவசாய ஆராய்ச்சி செய்பவர்களுடன் நிருபணை செய்பவர்களும் பிரசாரம் செய்பவர்களும் போதுமான அளவு ஒத்துழைக்காத காரணத்தினால் விவசாய முன்னேற்றம் சற்று பின்னடைந்திருக்கிறதென்றும் இந்திய கவர்ன்மெண்டாரும் மாகாண கவர்ன்மெண்டாரும் விவசாய ஆராய்ச்சி விஷயமாய்க்கூடி ஒத்துழைத்து வேலை செய்யப் போதுமான அவகாசம் இருக்கிறதென்றும் அப்படிச் செய்யாததினால் முன்னேற்றம் இவ்விஷயத்தில் சற்று பின்னடைந்திருக்கிறதென்றும் இத்தேசத்திலுள்ள ஏராளமான ஏழை விவசாயிகளின் தற்கால நிலைமையை அபிவிருத்தி செய்யும் பொறுப்பு இந்திய கவர்ன்மெண்டாருடையதே யல்லாமல் மற்றவர்களுடையதல்லவென்றும் அக்காரணத்தினால் இவ்விவசாய ஆராய்ச்சி விஷயத்தில் மாகாண இலாகா வேலைகளில் இந்திய கவர்ன்மெண்டார் அனாவசியமாய்ப் பிரவேசிப்பது நியாயமல்லவென்றும் குறித்திருக்கிறார்கள்.

2. ராயல் விவசாய சமிஷனர்கள் மேல்சொன்னவாறு அபிப்பிராயப்பட்டு மத்திய கவர்ன்மெண்டார்களுடைய பார்வையின் கீழ் நியமிக்கப்பட்டிருக்கும் சாஸ்திர ஆராய்ச்சி உத்தியோகஸ்தர்களுக்கும் மாகாண கவர்ன்மெண்டாரின் கீழ் நியமிக்கப்பட்டிருக்கும் சாஸ்திர ஆராய்ச்சி உத்தியோகஸ்தருக்கும் எவ்விதத்தில் ஒருவருடைய வேலையை மற்றவர்கள் முன்னிருந்ததைவிட நெருங்கி சாதாரணமாய் தெரிந்து செய்யக்கூடும் என்று தீர்க்காலோசித்து இம்பீரியல் ஆராய்ச்சி விவசாய கவுன்சில் ஒன்றை ஸ்தாபிப்பதுடன் மாகாண ஆராய்ச்சி சாலைகளுக்கும் இம்பீரியல் ஆராய்ச்சி சாலைக்கும் யாதொரு வித்தியாசமும் இல்லாமல் நடத்தப்பட வேண்டுமென்றும் அபிப்பிராயப்பட்டார்கள். இந்த இம்பீரியல் விவசாய கவுன்சிலின் வேலைகள் பின்வருமாறு இருக்க வேண்டுமென்று அபிப்பிராயம் கொடுத்திருக்கிறார்கள்.

a. இந்தியா பூராவிலும் விவசாய சம்மந்தம் உள்ளதும் மிருகவைத்தியசம்மந்தம் உள்ளதுமான ஆராய்ச்சிகளைச்செய்து அபிவிருத்தி யுண்டாக்கும் மார்க்கங்களில் முயற்சி செய்வதுமான வேலைகளைச் சகாயமாய் செய்தலே அந்த கவுன்சிலின் முக்கிய வேலை, ஆனால் இந்தக் கவுன்சிலின் நேரான பார்வையின்கீழ்யாதொரு ஆராய்ச்சி ஸ்தாபனங்களும் ஸ்தாபிக்கப்பட மாட்டாது. ஆராய்ச்சி செய்யும் நிபுணர்களும் இந்தக் கவுன்சிலினுடைய வேலைக்காரர்களாய் இருக்கமாட்டார்கள். ஒரு குறித்த விஷயத்தில் செய்யும் ஆராய்ச்சி இந்தியா பூராவிற்கும் பொருத்தமுள்ளதா? அல்லது ஒரு மாகாணத்திற்கு மாத்திரம் பொருத்தமுள்ளதா என்று தீர்மானிக்கவும் அவ்வாராய்ச்சி எந்த சோதனை மண்டபத்தில் அதாவது இம்பீரியல் சோதனை மண்டபத்திலா அல்லது மாகாண மண்டபங்களில் ஒன்றிலா அல்லது கல்வி இலாகாவை [யூனிவர்சிடியைச்) சேர்ந்த சோதனை மண்டபங்களிலா அல்லது ஒரு மிராசுதாரரின் பார்வையின் கீழா அல்லது வேறு எங்கு ஆராய்ச்சி செய்தல் நலம் என்று தீர்மானிப்பது அவர்கள் வேலையாகும். அப்படித் தீர்மானித்த பின் அந்த யோசனையை ஆங்காங்குள்ள நிபுணர்களுடைய ஆலோசனைக்கு விட்டு அவர்கள் அவ்விஷயத்தில் ஏற்படுத்தும் சிலவைக் குறித்து ஆலோசித்து அதற்குத் தக்கபடி பணம் கொடுக்க உத்தரவு செய்தல்.

b. ஆராய்ச்சிக்குப் பொருத்தமாய் உள்ள மாணாக்கர்களைத் தெரிந்தெடுத்து ஆராய்ச்சி வித்தியா அபிவிருத்தி விஷயமாய் பணம் செலவிடல் முதலிய உதவி செய்தும் பயிற்சி செய்வித்தல்.

c. ஆராய்ச்சி விஷயங்களிலும் பொதுவான விவசாயப் பழக்கங்களிலும் மிருகசிகிச்சை விஷயமாயுமுள்ள சங்கதிகளைச் சேகரித்து ஜனங்களுக்குள் பரவச் செய்தல்.

d. சாஸ்திர சம்மந்தமான மேற்சொன்ன விஷயங்களிலுள்ள எல்லாவித சமாசாரங்களையும் பிரசுரித்தல், இவைகளே மேல் சொன்ன கவுன்சிலின் முக்கிய வேலைகளாகும்.

3 விவசாய ஆராய்ச்சி கவுன்சில் இதனடியில் குறித்தவாறு அமைக்கப்பட வேண்டுமென்று ராயல்கமிஷன் அங்கத்தினர்கள் சிபார்சு செய்திருக்கிறார்கள்.

a. தங்களுடைய பூரு நேரத்தையும் இவ்வேலைகளில் கவனம் செலுத்தி செய்யக்கூடிய 3 அங்கத்தினர்கள் இந்தியா கவர்ன்மெண்ட்டாரால் நியமிக்கப்பட வேண்டுமென்றும் அதில் ஒருவர் கூடுமான வரையில் இந்த தேச நிலைமைகளைத் தெரிந்தவராயும் அரசாட்சி பரிபாலன விஷயங்களில் தேர்ச்சி அடைந்தவராயும் இருக்க வேண்டுவது அவசியமென்றும், ஏதாவது ஒரு பயிர் விஷயமாய் பிரத்தியேக சிரத்தையும் கவலையும் எடுத்துப் படித்த அனுபோகம் மிகுந்தவராயும் அத்துடன் சியாதி பெற்ற சாஸ்திர ஞானம் உடையவராயுமுள்ள மற்றொருவர் இருக்க வேண்டுமென்றும், இன்னும் ஒருவர் மிருக சிகிச்சை விஷயங்களிலும் மிருக போஷாப்பு சம்ரட்சணை அபிவிருத்தி முதலிய விஷயங்களிலும் நோக்கமும் தேர்ச்சியும் உள்ளவராய் இருக்க வேண்டுமென்றும் இம்மூவரில் அரசாக்ஷி பரிபாலன விஷயத்தில் தேர்ந்தவரே அக்ராசனாதிபதியாய் இருக்க வேண்டுமென்றும் குறித்திருக்கிறார்கள்.

b. இவர்கள் போக இன்னும் 36 அங்கத்தினர்கள் இந்தக் கவுன்சிலின் அங்கத்தினர்களாய் இருக்க வேண்டுமென்றும் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள்.

பூசாவில் இருக்கும் விவசாய ஆராய்ச்சி சோதனை மண்டபத்திலிருக்கும் டைரெக்டர் 1.

முக்தேசரில் இருக்கும் மிருக சிகிச்சை சோதனை ஆராய்ச்சி டைரெக்டர் 1.

இந்திய கவர்ன்மென்ட்டாரின்கீழ்கீழ்ப்பட்ட நிலயங்களுடைய பிரதிநிதி 1,

கவுன்சில் ஆப் ஸ்டேட்டால் தேர்ந்தெடுக்கப்பட்ட உத்தியோகஸ்தராய் இல்லாதவர் 1.

லெஜிஸ்லேடிவ் அஸெம்பிளியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உத்தியோகஸ்தர் அல்லாதவர் 2.

ஐரோப்பிய வியாபாரத் தொகுதியின் பிரதிநிதி 1.

இந்திய வியாபாரத் தொகுதியின் பிரதிநிதி 1

இன்டர் யூனிவர்சிடி போர்டாரவர்களால் நியமிக்கப்பட்ட இந்திய யூனிவர்சிடியின் பிரதிநிதிகள் 3.

இந்திய மத்திய பருத்தி கமிட்டியின் பிரதிநிதி 1.

இந்திய தேயிலை சங்கத்தாரும் தென்னிந்திய ஐக்கிய பிளாண்டர்கள் சங்கத்தாரும் சேர்ந்து தேர்ந்தெடுத்த பிரதிநிதி 1,

மாகாண விவசாய டைரெக்டர்கள் 9

மாகாண மிருக சிகிச்சை இலாகா டைரெக்டர்கள் 9.

மேற்சொன்ன விவசாய ஆராய்ச்சி இம்பீரியல்கவுன்சிலர்களும் சாஸ்திர ஞான சம்மந்தமாய் அல்லது வேறு சிதங்களில் லாயக்கென்று சிபார்சு செய்து இந்திய கவர்ன்மெண்ட்டாரால் நியமிக்கப்பட்ட உத்தியோகஸ்தர் அல்லாதவர் 5 ஆக 39

மேலும் இந்த இம்பீரியல் விவசாயகவுன்சிலில் விசேஷமாயுள்ள விஷயங்களைக் கவனிக்க வேண்டி வரும்பொழுது சப் கமிட்டிகளை நியமிக்க வேண்டுமென்றும் மாகாண வர்ண்மெண்ட்டார் மாகாணங்களில் விவசாய சம்மந்தமாய் நடத்தும் ஆராய்ச்சிகள் அபிவிருத்திகள் முதலியவை போன்றவைகளை இம்பீரியல் விவசாயகவுன்சில் அங்கத்தினர்கள் சுலபமாய் தெரிந்து கொள்ளக்கூடியனவாகவும் அவர்களுடன் நெருங்கிஒத்துழைக்கக் கூடிய விதமாயும் மாகாண கவர்ண்மெண்ட்டார் சப்கமிட்டி ஏற்படுத்தவேண்டுமென்றும் குறித்திருக்கிறார்கள். இச் சப்கமிட்டி ஏற்படுத்துவதில் தகுந்த ஆட்களைப் பொறுக்கி எடுப்பது மாகாண கவர்ண்மெண்டடாரின் பொறுப்பு என்று அபிப்பிராயப் பட்டிருக்கிறார்கள்.

4. இம்பீரியல் விவசாய கவுன்சிலின் வேலைகள் சரியாய் நடந்தேற வரத்தக்க பண உதவு இல்லாவிட்டால் விவசாய முன்னேற்ற விஷயமாய் யாதொரு சீர்திருத்தமும் செய்ய முடியாதாகையால் அதற்கு விவசாய ஆராய்ச்சி பண்டு ஒன்று ஸ்தாபிக்கப் பட வேண்டுமென்றும் அதற்காக மத்திய வரும்படிகளிலிருந் து ஐம்பது 50 லக்ஷ ரூபாயாவது கிராண்ட்டாய்க்கொடுபட வேண்டியதுடன் அதை அப்போதைக்கப்போது இன்னும் அபிவிருத்தி செய்துகொண்டுவர வேண்டுமென்றும் அபிப்பிராயப் பட்டிருக்கிறார்கள் இத்துடன் விவசாய ஆராய்ச்சி பண்டும சட்டப்படி அரசாங்கத்தாருல்ஸ்தாபிக்கப் படவேண்டுமென்றும் சிபார்சு செய்திருக்கிறார்கள்.

5. ராயல் விவசாய கமிஷணர்கள் செய்திருக்கும் சிபார்சுகளை இந்திய கவர்ண்மெண்ட்டார் தீர்க்க ஆலோசனை செய்ததில் பின்வருமாறு அபிப்பிராயம் கொண்டார்கள்.

ராயல் விவசாய கமிஷணருடைய சிபார்சு பொதுவில புகழத்தக்கதாயும நன்மையைப் பயக்கத்தக்கதாயும இருந்தபோதிலும் சில விஷயங்களில் இம்பீரியல் விவசாய கவுன்ஸில அமைக்கும் விஷயத்திலும் அதற்குப பணஉதவி செய்யும விஷயத்திலும் மாத்திரம

சற்று மாறுதல்கள் செய்வது அவசிய மென்றும் 39 அங்கத்தினர்கள் அடங்கிய கவுன்வில் அதிபெரிதாய் இருக்குமென்றும் ஆகையால் அதைச் சற்றுமாற்ற வேண்டிய தவசிய மென்றும் இப்போது சிபார்சு செய்திருக்கும் அவ்வளவு பணஉதவிசெய்யும் விஷயத்தைக் கையாட வேண்டுமென்றால் தற்காலம் லெஜிஸ்லேடிவ் அஸெம்பிளியின் அங்கத்தினர்களுக்கு இருக்கும் சுதந்தரத்தைப் பாதிக்குமென்றும் ஆகையால் மேல்குறித்த ஆட்சேபணைகளுக்கு இடங்கொடுக்காவண்ணம் இந்தியகவர்ண்மென்ட்டார் தீர்க்க ஆலோசனைசெய்து சில மாறுதல்கள் அடங்கிய தீர்மானங்களை சிம்லாவில் நாளது வருஷம் மேமாதம் 23ம்தேதி வெளியிட்டிருக்கிறார்கள். அவைகள் கீழே குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

(6) மத்திய இலாகாவானது நிர்வாக இலாகாவென்றும், அபிப்பிராயம் சொல்லும் இலாகா என்றும் இருவிதங்களாய்ப் பிரிக்கப்படும்.

நிர்வாக இலாகா கீழே 7வது பாராவில் சொல்லப்பட்டவைகளல்லாத மற்ற எல்லா அம்சங்களை நடத்துவிப்பதோடு பணப்பொருப்பையும் வஹித்திருக்கும்.

கனம் மேன்மைதங்கிய இராஜப்பிரதிநிதியவர்களின் விவசாய சப்மந்தமான நிர்வாகசபையின் அங்கத்தினர் (எக்ஸி கூடிவ் கௌன்சில் விவசாய மெம்பர்) அச்சபைக்குத் தலைமை வஹிப்பார். இந்திய கவர்ண்மென்ட்டாரால்நியமனம் செய்யப்படும் ஒரு உத்தியோகஸ்தர் அதன் சார்பான காரியாதிகளை வஹித்து நடத்துவதுடன், அவரே உதவி தலைவராயும் இருப்பர். கௌன்சில் ஆப் ஸ்டேட்டின் பிரதிநிதியொருவரும், லெஜிஸ்ட்லேடிவ் அசெம்பிளியின்பிரதிநிதிகள் இருவரும், இந்தியா சிலோன் ஆகிய இருதேசங்களிலுள்ள ஐரோப்பிய வியாபாரிகள் சங்கத்தாரின் பிரதிநிதி யொருவரும், இந்தியன் சேம்பர் ஆப் காமர்ஸ் பெடரேஷனின் பிரதிநிதி யொருவரும்முக்கிய மாகாணங்கள் ஒவ்வொன்றிலும் நியமிக்கப்படும் பிரதிநிதிகள் ஒவ்வொரு மாகாணத்திற்கும் இருவரும், மேற்சொன்ன அபிப்பிராயம் கொடுக்கும் இலாகாவின் இருபிரதிநிதிகளும், இராஜப்பிரதிநிதியவர்களால் அப்போதைக்கப்போது நியமனம் செய்யப்படும்பிரதிநிதிகளும் சேர்ந்து நிர்வாகசபையின் அங்கத்தினராவார்கள்.

விவசாயமந்திரிகள் அந்தந்த இராஜதானியின் பிரதிநிதிகளாவார்கள்: சென்ற அக்டோபர் மாதத்தில் இந்திய ராயல் கமிஷன் ரிபோர்

ட்டைப்பற்றி யோசனை செய்வதற்காக கவர்ண்மென்ட் ஆப் இந்தியா கூட்டம் கூட்டி யோசித்தபோது அந்தந்த இராஜதானியின் விவசாய மந்திரியே அந்தந்த இராஜதானியின் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்படவேண்டுமென்று மந்திரிகள் அபிப்பிராயப்பட்டார்கள். இந்த அபிப்பிராயத்தை அந்தந்த மாகாணங்களின் கவர்ண்மெண்டாருக்குத் தெரிவித்து அவர்கள் அபிப்பிராயங்கள் கேட்டதில் அநேகமாய் எல்லோராலும் மேற்சொன்ன விஷயங்கள் அங்கீகரிக்கப்பட்டன. இந்தியா கவர்ண்மென்ட்டாரும் அந்தந்த இராஜதானியின் மந்திரிகள் அந்த நிர்வாக சபையின் அங்கத்தினர்களாயிருப்பதில் நிர்வாக சபை திறமையுடன் வேலை செய்வதற்கு ஏதுகரமாயிருக்குமென அபிப்பிராயப் படுகிறார்கள். அத்துடன் அந்தந்தமாகாண விதிகளில் அந்த நிர்வாகச்சபைக் கூட்டங்களுக்கு மந்திரிகள் போவதற்கு சாத்யமில்லாத போது அக்கூட்டங்களுக்குப் போவதற்கேற்ற ஓர் பிரதிநிதியைத் தெரிந்தெடுத்து அவர்போவதற்குண்டான சாதகங்களை அமைக்கும்படி ஏற்பாடு செய்யப்படவேண்டு மென்றும் தீர்மானித்தார்கள்.

கௌன்சில் ஆப் ஸ்டேட்டால் ஸ்ரீமான் வீ. ராமதாஸ்பந்துலு காரையும், டெல்ஹி சட்டஅசெம்பிளியாரால் ஸ்ரீமான் மீயான் மஹமத்ஷாநவாஜ் அவர்களையும் ஸ்ரீமான் சௌதரி மக்தார்சிங் அவர்களையும் அந்த நிர்வாக சபைக்குத்தங்கள் தங்கள் பிரதிநிதிகளாய்த் தேர்ந்தெடுத்தார்கள். இந்தியா சிலோனிலுள்ள ஐரோப்பிய வியாபாரச் சங்கத்தார் ஸ்ரீமான் சர் ஜோஸப் கே துரையவர்களையும் இந்திய வியாபார சங்கத்தார் ஸ்ரீமான் வால்சண்ட் ஹீராசண்ட் சி. ஐ. இ. அவர்களையும் தங்கள் தங்கள் பிரதிநிதிகளாய்த் தேர்ந்தெடுத்தார்கள்.

### அந்த விவசாய ஆலோசனை சபையின் வேலைகள்

நிர்வாக சபையாரால் யோசனைசெய்து அனுப்பப்படும் விஷயங்களை ஆலோசித்து சாத்யமா அல்லவா வெனத் தீர்மானிப்பதும் அவைகளைப்பற்றிய தங்கள் அபிப்பிராயங்களைக் கூறுவதும் அவர்கள்கடமையாகும். விவசாய ராயல் கமிஷனால் தீர்மானிக்கப்பட்ட அங்கத்தினர்களில், மாகாண சட்ட சபை பிரதி நிதிகளும், இந்தியாசிலோனிலுள்ள ஐரோப்பியவிவசாய வியாபாரக்கூட்டத்தாலும், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் நீங்கலாக மற்றவர்களெல்லாம் அதில்கலந்து யோசனை செய்வார்கள்-நீக்கப்பட்டதாக மேலே சொன்னவர்கள் நிர்வாக சபையில் சேர்ந்திருப்பதால் அவர்களை ஆலோ

தனை சபையில் சேர்க்கவேண்டியதில்லை யென்று இந்திய கவர்ண்மெண்டார் அபிப்பிராயப்படுகிறார்கள். மேலும் மேற்சொன்னவர்கள் நிபுணர்கள் ஆதலாலும், அவர்களை ஆலோசனைச் சபையிலிருந்து பிரிக்கப்பட்டதாலும் இந்திய கவர்ண்மெண்ட்டாரும், மாகாணக் கவர்ண்மெண்ட்டார்களும் ஆலோசனைசெய்து சாஸ்திரிய நிபுணர்களையும், காலாசாலை பிரதிநிதிகளையும் அவசியமானபோதும் வேண்டும்போதும் போர்டில் பின் கண்டவாறு அதிகப்படுத்துவதெனத் தீர்மானித்தார்கள்.

(2) நிர்வாக சபையின் உதவி அக்ராசனாதிபதி

(3) இந்திய கவர்ண்மெண்டாரால் நியமிக்கப்படும் முழுநேரமும் அதற்கெனவே வேலைசெய்யும் இரண்டு நிபுணர்கள்.

(4) பூசாவிலிருக்கும் ஆராய்ச்சி சாலையின் தலைவர்.

(5) முக்ரேசரிலிருக்கும் கால்நடை ஆராய்ச்சி சாலைத் தலைவர்.

(6) பங்களூரிலிருக்கும் இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் ஸயன்ஸ் தலைவர்

(7] விவசாய டைரெக்டர் சென்னை
(8) „ பம்பாய்
(8) „ யூனைடெட்பிராவின்ஸ்கள்
(10) „ பெங்கால
(11] „ பஞ்சாப்
(12) „ பர்மா
(13) „ பீஹார்—ஒரிஸ்ஸா
(14) „ மத்திய பிராவின்ஸ்கள்
(16) „ அஸ்ஸாம்
(16] கால்நடை இலாகாதலைவர் சென்னை
(17) „ பம்பாய்
[18) „ யூனைடெட்பிராவின்ஸ்கள்
(19) „ பெங்கால்
(20) „ பஞ்சாப்
(21) „ பர்மா
(22) „ பீஹார் ஒரிஸ்ஸா
(23) „ மத்திய பிராவின்ஸ்கள்
(24) „ அஸ்ஸாம்

(25) கவர்ண்மெண்ட் ஆப் இந்தியாவால் நியமனம் செய்யப்படும் [illegible] அட்மினிஸ்ட்ரேஷன் பிரதிநிதி

(26) டோரோனிலிருக்கும் காட்டிலாகா காலேஜிலுள்ளவர்களில் இந்தியா கவர்ண்மெண்ட்டார் நியமனம் செய்யும் ஒருவர்.

(27) கோவாபரேடிவ டிபார்ட்டு மெண்ட்டிலுள்ளவர்களில் இந்தியா கவர்ண்மெண்ட்டார் நியமனம் செய்யும ஒருவர்.

(28) இந்தியன் ரிசர்ச் பண்ட் அஸ்ஸோஸியேஷனால் தேர்ந்தெடுக்கப்படும் நால்வர்.

(29 முதல் 32வரை] இந்தியன் யூனிவர்சிடி போர்டாரால் தேர்ந்தெடுக்கப் படும் நால்வர்.

(33) இந்தியன் தேயிலை சங்கம் யுனைடட்பிளான்டர்ஸ் அசோசியேஷன் ஆகிய இருசங்கத்தாரால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதியொருவர்.

(34] மத்தியபருத்தி சங்கத்தாரால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதியொருவர்.

(35 முதல் 39) சாஸ்திர ஆராய்ச்சியுடைவர்களென்று சட்ட நிருபண சபையார்களால் நியமிக்கப்பட்டவர்களில் இந்திய கவர்ண்மெண்ட்டாரால் நியமிக்கப்பட்ட ஐவர்.

கவர்ணர் ஜெனரல் இன் கௌன்சிலரால் அப்போதைக்கப்போது தெரிந்தெடுக்கப்பட்ட இதார்கள்.

இந்தியாவின் தேயிலை அசோசியேஷனும் யூனைடெட் பிளான்டர்ஸ் அஸோசியேஷனும் சேர்ந்து அஸ்ஸாமில் டெக்லி என்னுமிடத்திலுள்ள அவர்கள் நிபுணரான ஸ்ரீமான் பி. கே. கார்பெண்ட்டர் என்பவரைத் தங்கள் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுத்தார்கள்.

இந்தியா கவர்ண்மெண்டார் பூனாவிலுள்ள சர்வெண்ட் ஆப் இந்தியா சுசைடியாரின் தலைவரான ஸ்ரீமான் ஜி. கெ. தேவதார் சி. ஐ. இ. என்பவரை கோஆபரேடிவ் மூவ்மெனட் பிரதிநிதியாகத் தெரிந்தெரிந்தெடுத்தார்கள்.

மைனர் அட்மினிஸ்ட்டிரேஷன் பிரதிநிதியையும், டேராடூன் காட்டிலாகா காலேஜிலுள்ளவர்களில ஒருவரையும் சமீபத்தில் தேர்ந்தெடுப்பார்களென்று அறிகிறோம்.

நிர்வாக சபையின் வேலைகளை நடத்துபவர் ஆலோசனை சபையின் உதவி அக்கிராசனுவர்.

மற்றவர்களெல்லாம் ராயல் கமிஷன் சிபார்சு செய்தவாறு (மூன்று பூராவேலை செய்யும் நிபுணர்கள், நிர்வாக சபையின் சப் கமிட்டி முதலியவர்கள்) நியமிக்கப்படுவார்கள்.

ராயல் கமிஷனுல் சிபார்சு செய்தபிரகாரம் கௌன்சில் ஆப் ஸ்டேட்டாலும் லெஜிஸ்லேடிவ் அசெம்பிளியாலும் தேர்ந்தெடுக்கப்பெற்றவர்கள் நீங்கலாக அவரவர்கள் அந்தந்தவேலை வஹிப்பதின் நிமித்தம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் மூன்று வருஷங்கள்வரை அந்த ஸ்தானத்தை வஹிப்பார்கள். இரண்டு நிபுணர்களும், காரியஸ்தர்களும் சாதாரணமாய் ஐந்துவருஷங்களுக்கு அந்தந்த ஸ்தானங்களை வஹிப்பார்கள்.

7. ராயல்கமிஷன் சிபார்சுசெய்த மொத்தத்தொகை 50 லட்சத்தில் இந்திய கவர்ண்மெண்ட்டார் ஆரம்பத்தொகை 25 லட்சமாகவும் அதில் 15 லட்சம் 1929—1930ம் வருஷ பட்ஜட்டில் சாங்ஷன்செய்திருக்கிறார்கள். 1930—1931ம் வருஷம் முதல்வருஷவாரி ஏழேகால் லட்சம் ரூபாய்கள் வீதம் செலவிடுவதென்றும் அதில் 5 லட்சம் சாஸ்திரீய ஆராய்ச்சிக்காகவும் மீதி இரண்டேகால் லட்சம் ரூபாய்கள் சிப்பந்தி செலவுக்கென்றும் தீர்மானித்திருக்கிறார்கள். இந்த வருஷத்தில் சிப்பந்தி முதலிய செலவுகளுக்கு 1. 40 லட்சம் செலவிடுவதாகத் தீர்மானித்திருக்கிறார்கள். இந்த ௵ செலவு செய்வதாய்த் தீர்மானித்த தொகை லெஜிஸ்லேடிவ் அசெம்பிளியின் சம்மதத்தின் பேரிலேயே கொடுப்பதாய்த் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

இனிமேலும் லெஜிஸ்லேடிவ் அசெம்பிளியாரின் சம்மதத்தின் பேரிலேயே இச்செலவுகள் செய்ய ஏற்பாடு செய்யப்படும்.

விவசாய ஆராய்ச்சி நிர்வாக சபையானது அதற்கெனக் கொடுக்கப்பட்ட தொகையை அதன் இஷ்டப்பிரகாரம் செலவழிக்க சுதந்தரமுடையது. ஆனால் பென்ஷன், ரஜாவுக்காக வேறுபடுத்தி வைத்தல் முதலியவைகளைக் கொடுக்கக் கட்டுப்படுத்தக்கூடாது. இந்த டிபார்ட்மெண்ட்டார் கவர்ண்மெண்ட் ஆப் இந்தியா செக்ரடேரியட் போலவே கருதி நடத்தப்படும்.

8. இதைப்பற்றிய விவரங்களெல்லாம் சென்ற அக்டோபர்மாதத்தில் கூடிய மாகாண மந்திரிகள் முதலியவர்கள் சேர்ந்த கூட்டத்தில் வைக்கப்பட்டு பொதுவாக எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டது.

9. ராயல் கமிஷன் சிபார்சு செய்தபிரகாரம் இந்திய லெஜிஸ்லேடிவ் விதிகளின் பிரகாரம் விவசாய ஆராய்ச்சி நிர்வாகசபை ஸ்தாபிதப்படவேண்டாமென்றும் 1860ம் ௵த்து 2 வது ஆக்ட்பிரகாரம் ஸ்தாபிதப் படுத்தவேண்டுமெனவும் தீர்மானித்தார்கள். மேற்சொன்ன ஆக்ட்பிரகாரம் சங்கம் சேர்ப்பதற்காக ஷை கூட்டத்தார் சமீபத்தில்

கூடி சட்டதிட்டங்களும், மிமோராண்டம் ஆப் அசோசியேஷனும் தீர்மானிப்பார்கள்.

10. இதில் நியமிக்கவேண்டிய உத்யோகஸ்தர்களையும், இரு நிபுணர்களையும் காரியதரிசியையும் சீமையிலிருக்கும் செக்ரடரி ஆப்ஸ்டேட் ஆப் இந்தியா அங்கீகாரம் செய்துவிட்டார்கள். முதல் குறிப்பிட்ட மூன்று உத்யோகஸ்தர்களின் பேர்களும் சீக்கிரத்தில் வெளியிடப்படும். ஆனல் சென்னை மெஸ்தர்யம், யஸ். எ. ஷைந்தாசி ஐ. சி. யஸ்.என்பவர் காரியதரிசியாக நியமிக்கப் பட்டிருக்கின்றார்.

11. ராயல் கமிஷன் சிபார்சுசெய்த பிரகாரம் கூடியவரையில் மேற்சொன்ன ஹம்சங்களை யொட்டி மாகாண கவர்ன்மெண்ட்டார்கள் மேற்சொன்ன விஷயங்களில் ஒத்துழைப்பதற்கான காரியுக்திகளைக் கையாடியும் ஆங்காங்குள்ள பழக்கவழக்கங்களை யனுசரித்தும் எவ்வாறு சீர்திருத்தக்கூடுமோ அவ்வாரெல்லாம் யோசனைகள் சொல்லியும் அபிவிருத்தி யடையும்படி உதவி செய்வார்களென இந்திய கவர்ன்மெண்ட்டார் நம்புகிறார்கள்.

## Clearance of doubts in correspondence

## கடிதவினு சந்தேகம் மாற்று

### உரம்வைத்த இலுமிச்சு பட்டதேன்?

கிருஷிகன் 12ம் வாலம் 17ம் பக்கம் ஸ்ரீமான் ஆர். யஸ். வெங்கிட்ட ராமய்யர் எலுமிச்சங் கன்றுக்கு உரமிட்டதும் பழுகையானதாகச் சொல்லப் படுகிறார்.

கிருஷிகன் 11ம் வாலம் 269ம் பக்கம் 1வது பாருவில் திருப்பேரூர் கார்த்திகைமாதம் இலுமிச்சங்கன்று நட்டது மழைகால ஈரப்பதம் பிடியாமல் புழிப்பு குடுத்து வேர்பாய்ந்து செல்ல தடைப்படும், கன்று நாற்பக்கம் வெட்டி கொத்தி ஊறி காற்றுாட விடச்செய்வது அத்தியாவசியம். பின்னும் மேல்படி 2வது பாருவில் இலுமிச்சு நட்டு 2 மாதங் கழிச்சலிருந்து பின் மழை பெய்யின் அதற்குள் வேருண்டாகி மழையை சட்டை செய்யாதென்று கிருஷிகனுசிரியர் எச்சரித்ததை திருபரேயர் கவனிக்கவில்லை.

*தந்தைமகற்காற்று நன்றி
யவையத்து முந்தியிருப்பச் செயல்

என்று நாயனூர் கூறியது போன்று விவசாயிகள் மேம்பாடுறும்படி செய்வதே கவலையாய் தனது வாழ்நாளின் பயனென்று கருதி யெழுதி வரும் கிருஷிகனுசிரியர் ஜனங்களிடம் அனுதாபங்காட்டி, வேண்டு

* தந்தை புத்திரற்குக் கல்வி போதனை முற்றச்செய்து பேரியோர் சபைகளில் முன்னிருக்கச்செய்வதே.

சகாயம் புரிகிறார். விவசாயிகள் நிலங்களைப் பார்வைசெய்து குறைகளை நிவிர்த்தி செய்து வரும் நன்றி மறத்தற் பாலதோ?

○ கைமாறு வேண்டாகடப் பாடுமாரி மாட்
டென்னாற்றுங் கொல்லோவுலகு.
என்றார் நாயனார்.

பென்ஷனான விபசாய உத்தியோகஸ்தர் கிருஷிகனாசிரியர் மாத்திரந் தானா? பின்னும் டிப்டிடைரெக்டர், காலேஜ் தாவரபுரொபசர் முதலிய நோவு சாஸ்திரிகள், பாம்மானேஜர் முதலியோர் மிகுதியுண்டு. அன்னாரில் யாரேனும் விபசாய அபிவிர்த்தி யாது செய்கின்றனர்? தேசத்தில் கூடுஞ் சபைகளில் பிரசன்னமாய் பிரசாரஞ் செய்யாததென்னே? பத்திரிகை நடத்தப் படாதா? வீணேகாலங் கடத்துவது அந்தோ பரிதாபம்! பரிதாபம்!! அவ்வாறின்றி பிரபத்திரிகைகளுக்கு விஷயதானம் புரிந்தும் ஜனங்களுக்கு விர்த்தி போதித்தும் கிருஷிகன் நடத்திவரும் ஆசிரியருக்கு நன்றி செலுத்தி பத்திரிகை நிகழுமாறு வேண்டும் சந்தா சேர்த்துத் தரும்படி நேயர்களை வேண்டுகிறோம்.

நாளது வருடம் பிரசுரித்த மதராஸ் சுதேசமித்திரன் பத்திரிகை யனுபந்தத்தில் கிருஷிகனாசிரியர் எழுதிய விவசாய அபிவிர்த்தி வியாசம் பாராட்டி மகிழ்தற்குரியது. கிருஷிகனாசிரியர் போதனை கேட்டு நிருபநேயர் இலுமிச்சங்கண்களுக்கு உரஞ்செய்திருந்தால் இலுமிச்சங்கண் படமாட்டாது. அவசரப்பட்டு உரமிட்டு 2-1 வருடத்தில் காய்க்கக்கூடிய இலுமிச்சங் கண் படச்செய்தது மிக்க பரிதாபம்.

தந்தை சொன்மிக்க மந்திர மில்லையென்று ஒளவையார் அருளியவாறு தந்தையின் கீழ்வாழ்ந்து பழகிய புத்திரர் விபசாயஞ் செய்வது தாழ்வடைய மாட்டாது. அனுபவமின்றி புதிதாய் விபசாயஞ் செய்வோருக்கு நஷ்டமுண்டாவது ஆச்சரியமன்று. அங்கே இலுமிச்சங்கண் விருத்திசெய்து விற்போருளரேல் நிருபநேயர் அன்னார் விலாசந் தெரிவிக்கவேண்டுகிறேன். கிருஷிகனில் இலுமிச்சங்கண் தேவை என்று அநேகர் தெரிவித்திருக்கிறார்கள். தஞ்சாவூர்ஜில்லா ஐயம்பேட்டை வகையரு 4 கிராமங்களில் இலுமிச்சங்கண் விருத்தியாக்கி விற்கப்படுகிறது. பத்திரிகையில் நோட்டீசு போடுவதில்லை. இந்தியா வியாபார விருத்திமுறை கவனியாதது விசனித்தற்குரியது: ஆங்கிலேய வியாபாரம் சிறு சாமான்களுக்கும் நோட்டீசு போடும் சாதுரியஞ் ஜாஸ்தி. அவ்வித ஊக்கம் இந்தியாவில் எப்போ குடிகொள்ளுமோ? ஜெகதீசனே ஊக்கமளிப்பாராக. கும்பகோணம்சந்தாநேயர்கள் ஐயம்பேட்டை வகைரா கிராம இலுமிச்சங்கண் விற்போர் விலாசங் கூறப்படாதா?

---

○ பிரதி யுபகாரம் எதிர்பாராமல் மழை பொழிந்து ஜனங்களை வாழச் செய்வதே.

இலுமிச்சங்கன்று நட்டு 3·4 வாரத்தில் துளிர்விட்டு இலையுண்டாகும்,
இலையுண்டானதால் கண்ணடியில் புதியவேருண்டாகியிருது தழுத்த கண்
களை சோதித்தாலும் வாஸ்தவம் தெரியும். நடவான கண்ணில் குருவேர்
பாய இரண்டு இரண்டரை மாதமாகும், கண்ணூரிலுள்ள பழயவேர் கூட
நீண்டு முளையுண்டாய் பூமியில் பாய்ந்திருக்க. குருவேர் பலத்து நீண்டு
உருதியடைய பின்னும் 2மாதமாகும். வேர் உருதியான பின்பே பூசாரங்
கிரகித்து மரவளர்த்திக்கே துவாகும். வேர்பாயும் வரை நட்ட கண்ணிலுள்ள
இரசமே போஷிக்கப்படுகிறது. நடவாய் 4 மாதத்துக்கு பின்பே கன்
றாத்தங்காலில் பூசாரம் கிரகித்தமாதிரி பயிருணவு கிரகித்து திடமான
வளர்த்தியுண்டாகும் புது வேர்மூலம் பயிருணவு கிரகிக்கும் வரை செ
வளமானதோற்றமாயிருக்கு.

இலுமிச்சங் கண்வைத்து 6 மாதமாகு முன் உரம் வைப்பது பிசகு-
மிருது தன்மையுள்ள மெல்லிதான இழவேர் உரவெக்கை தாங்க முடியா
மல் படவேசெய்யும், வேர் நன்றாயூன்றி உறுதி யடையுமுன் உரமிவது
தீங்கேயாம். அதிபால்யமான குழந்தைக்கு பாலீந்து பின் சன்னஞ் சன்ன
மாய் அன்னங் குடுக்கப்படுகிறது. பால் கொடுக்கும் காலம் அன்னம் குடுப்ப
தென்ன கெடுதியாமோ அவ்வாறே இழங்கன்றுக்குரமிடவே படவதுவாகும்,
மடித்து ஜீரணமாகாத எருவை வைத்தது இலுமிச்சங்கண் படாதிருப்ப தெவ்
வாறு? கிருஷிகன் 12ம் வாலம் 18ம் பக்கம் 9ம் வரிமுதல் 13ம் வரிவரை ஜீர
ணமான உரக்கலவை மண்ணை இலுமிச்சங்கண்களுக்கு உரமாக்கவும் கண் செ
ழிப்பா புண்டானதாக நிருபநேயர் கூறியதே நமது கொள்கையை உருதிப்
படுத்தும். நண்பர் நீரூற்றுபார்தைசாலம் இலுமிச்சங்கண் நடவுசெய்தது வே
ர்பிடித்திருந்த கண்களை சோதனை செய்யின் நண்பர் உண்மையறிவார் வே
ரூன்றி பலக்குமுன் உரமிட்டதால் இலுமிச்சங்கண்கள் பட்டதென்றறிந்து
கொள்வாராக. பூஞ்சானம் வேரில் டாதிருக்கலாம்,

இலுமிச்சுக்கு எப்பவும் ஜீர்ணமானஉரம் நலம், அதிலும் இலுமிச்சங்
கன்றுக்கு ஜீரணமாய் மடித்த பழய உரமே சிரேஸ்டமாய் வளர ஏதுவா
கும். எவ்வளவு காரங்குறைந்த உரமானாலும் மடிக்காத புது உரம் உபயோ
கிக்கப்படாது.

இலுமிச்சந் தோட்டத்தில்2—3—4கஜசதுரம் முக்கால்கஜ ஆழம்அவ
வர்கள் தேவைக்குத் தக்கபடி உரக்கிடங்கு தயாராகவேணும், அதில் மாட
டெரு, மீனெரு, மாடு ஆடு சவ்வு, புண்ணாக்கு, கொம்புதூள், எலும்புதூள்,
அடுப்பு சாம்பல்,மாட்டுத்தொழுவத்தடி மூத்திரம் ஊரியமண்,முதலிய உரங்க
ளில் அமைந்ததை கலக்கவும். கலவைஉரத்தில் அரைஅடி உயரமாம்படிவெட்
டிய கிடங்கில் கொட்டி அதன் மேல், மாடு கழித்தவைக்கோல் சோழத்தாள்
இலைசருகுகள் அமைவதை அரைஅடி உயரம்போட்டு செழிப்பாக மாட்டு சா

ணியை தண்ணீரில் கரைத்து தெளிக்கவும், இவ்வாறு பலஅடுக்குகள் போட்டு குளி ரெப்பவும். அடுக்குதோறும் சாணி தண்ணீர் தெழிக்கவும், வாரத்தில் 1 தபாஜலமாவது சாணித்தண்ணீருவது, தெழித்து ஈரம் வாடாமலிருக்க வேண்டும், சதசதப்பாய் சேறும்நீருமாய் விடவும் படாது, 3ம் வாரத்தில் எல்லாம் ஒன்ருய் ரேகிக்கும்படி வெட்டிக் கிளரிக்கலக்கவும், இவ்வாறு வாரந்தோறும் கிளரவும் வேண்டும். 5-6 ம் வாரத்தில் உரம் மடித்து விடும். இந்த உரம் இலுமிச்சுக்கு வைப்பது சிரேஷ்டம். கெடுதிவராது. எலும்புத்தூள்; அடுப்பு சாம்பல் மாட்டுசாணி சேராதிருக்கப் படாது, மடிக்காத மாட்டெரு வேர்ப் புழுபாதையுண்டாகும். மற்றஉரம் மடித்து விடும்போது வெக்கைதாங்க முடியாமல் மரம்படவே செய்யும். வளர்ந்த இலுமிச்சங்கனி தலைபறியப்படாது. மலைத்து தேறியுண்டாகி காய்க்க நாளாகும், காற்றினால் கண்ணசையாதிருக்குமாறு கண்ணை யொட்டி கம்பு நிறுத்தி கண்ணைசேர்த்து கட்டலாம்,

## களர்நில மா விர்த்தி

கிருஷிகன் 12ம் வாலம் 18ம் பக்கம் ஒன்ருவது பாரு 5வது வினவில் களர்நிலத்தில்நட்டமாவிலுள்ள நிலம் திருத்தமும் மா வளரச்செய்வதெவ்வாறென்று ஸ்ரீமான் ஆர். யஸ். வெங்கிட்டருமய்யர் விரும்புகிருர்.

ஒட்டுமா நடவாகுமுன் நாலரைஅடிநீளம், அகலம் நாலரை அடி, ஆழம் நாலரையடி குளிவெட்டவேண்டும், அதினடியில்

சுக்கான்கல்சுண்ணும்புசரள் ஒன்னரை அடிஉயரம் போட்டுமேல் அரை அடி மண்போடவும். அதன்மேல் 20 ருத்தல் எலும்பு நொருக்கி பரவலாய் சிதரி மேல்செம்மண்போட்டு பூரு குளிநிரத்தி ஒட்டுமா நடவுசெய்வது சிரேஸ்டமாயுண்டாகும். குளியடிவரை வேர்செல்லும்போது மாவிருத்தி சிலாக்கியமாயிருக்கும். கிடங்கடியில் சுக்கான் கல்விருப்பது பழம்ருசிகுடுக்கும். களர் உப்பு ஆவியாகிவிடாமல் வெளியே கழிந்துபோம். மாவிருத்தியும் மேம்பாடாயிருக்கும்.

கண் நடவாய்விட்டதால் கண்துரிவிருந்து 3 கஜத்துக்கப்பால் மரத்தின் 4புறமும் 3அடி ஆழம் 2அடி அகலங்கால்வெட்டி, மண்ணை வெளியாக்கவேண்டும். காலடியில் ஒன்னரை அடி உயரம் *சுக்கான்கல் போட்டு அதன்மேல் செம்மண்ணால் நிரத்திவிடவும்- களருக்கு மூலமான சோடியம்

---

* சுக்கான்கல் இரண்டு தினுசிருக்கிறது; செகப்பு, வெள்ளை. முந்தினது மாவிருத்தி செய்யும். பிந்தியது கெடுதியாகும், செகப்பு சரள் செம்மண் பூசி உள்பாகம் கல் மிளகு பருமன் முதல் தேங்காய் பருமன் வரை காடு மொரடாய் கருப்பாயிருக்கும். வெள்ளை சரள் மிளகு பருமன் கல்லும் வெள்ளை மண் கலந்திருக்கும்; சுண்ணும்புகளர் இதுவே-

உப்பு வெட்டிய கால்களில்கசிந்து ஊரி வெளியாய்க் கழிந்துபோம், உப்பு கழிவாகவே ஆவியாகி களர் உப்பு பூமியில் படியாது. உப்பு படியாதவரை பயிரை பாதியாது: மரத்தையும் கெடச்செய்யாது. மாந்தோட்டம் பக்கம் தாழ்ந்த நிலமாவது ஓடைபாதைகளாவதிருக்குமாகில் 2வரிசை மா மரத்துக்கூடாக 3அடி அகலம் 3 அடி ஆழம் தோட்ட'ம் முடிவுக்கு பாதைவரை நீளமாகக்கால் வெட்டவேண்டும். காலடியில் ஒருஅடி உயரம் சுக்கான் கல்போட்டு மண் நிறத்திவிடவும். இந்த வடிகால் மூலம் களர் உப்பு மழைபெய்யும்போது ஊரிக்கசிந்து வெளியாய்விடும். களர்பாதைமரத் தைபாதியாது, களர் நிலத்தில் கொழுஞ்சி அவுரிபெரும்பயறு உண்டாகாது

தக்க உழவுசெய்து டெயின்சா விதைத்து 2மாதமாகவும் புஷ்பித் தவுடன் மடக்கி உழுது விடவும், டெயின்சா 2—தபா உண்டாக வருத்த ப்படினும் பின்வளமாயுண்டாகும். அடிக்கடிடெயின்சா ஊசித்தகரை,சடலே ஆவரை விதைத்துஉண்டாக்கி மடக்கி உழுதுவிடவும். களர்நிலம் ன்னிலமாய்விடும், டெயின்சா முதலிய முத்தினால் கட்டையாய்த்து வெட்டவும் பூமியில்பதிக்கவும் கஷ்டம். முற்றுமுன் மாவுக்கு உரமாகக் கூடிய தூங்குமூஞ்சி, முள்முருங்கை போன்ற தழை எரு கொடுக்கக் கூடிய செடிகளை உண்டாக்கி மாவுக்கு கெடுதியாக கிளை படருந்தோறும் கிளைகளை அப்பப்போ கவாத்துசெய்து அந்த இடத்தில் புதைக்கவும். களர் பாதையை மீரவிடாது. நாளடைவில் நிலந்திருந்திவிடும். களரில் சவுக்கு தூங்குமூஞ்சி வளமாயுண்டாகும், இந்த மரங்களுக்கு களர் உப்பை உண வாக்கப் பிரியமதிகம், இதன் விருத்திக்கு நீரூற்று பாதைகூடாது. தூங்கு மூஞ்சி மரம் பத்துவருடம் நிற்கவும் களர் அற்றுப்போனதாக கான்பூர்விவசா ய டிபார்ட்மெண்டார் தெரிவிக்கிறார்கள்: சவுக்கு மரம் களரில் விருத்தி யானதை பார்த்துள்ளோம். களர் நிலம் தானியவகைப்பயிரைதியவைக்கும்; களரை திருத்துவதவசியம்,

க்ஷயம் நீரிரக்கம் பாதித்த மனிதன்தேகம்இளைத்துப்போம்,இளைப்பின் னேதிர பலவிர்த்தி மருந்து சாப்பிட்டுகாலர்தள்ளப்படும்;அதுபோன்று களர்பாதை தாக்கி மரங்கெடாமல் விருத்தியாக அடிக்கடி டெயின்சா முதலிய பசுந்தாள்உ ரப்பயிர்செய்து மடித்துஉழுவதவசியம்அடிக்கடிஉரமிடாதவரை களர் மீறி கெடுதிசெய்யும். (தொடரும்.)

வெ. ப. திருமலையப்ப முதலியார்.

## குறிப்பு

சென்னை விவசாய டைரெக்டர் ஆர்; டி. ஆன்ஸ்டெட் துரை அவர்கள் ரஜாவில் செல்கிறார். அவருக்குப் பதிலாக இதுவரை பரு த்தி நிபுணாயிருந்த ஜி. ஆர். ஹில்சன் துரை டைரெக்டராகப் போடப்பட்டிருக்கிறார்.

# CATTLE

[1929ம் வருஷம் ஏப்ரல் மீ 10உ திருவண்ணாமலை டிவிஷனல் ஆபீசில் ஜில்லா கலெக்டர் ஸ்ரீமான் அப்பாதுரை பிள்ளை அவர்கள் தலைமையில் கூடிய விவசாய மஹாநாட்டில் திருவண்ணாமலை வெட்டர்னரி அஸிஸ்டண்ட் சர்ஜன் ஸ்ரீமான் ஜீ. பி. ஸ்ரீநிவாச ஐயரவர்கள்

## மாடுகளும் அவைகளின் பாதுகாப்பும்

என்பதைப்பற்றி செய்த உபந்யாசம்.

கிருஷித்தொழிலிலேயே சிறப்படைந்திருக்கிற இந்தியாவில், அத்தொழிலுக்குப் பிராணாதாரமாயிருப்பது கால்நடைகளேயாம். பயிரிடும் குடியானவனுக்கு எருவை வயலுக்குக் கொண்டு சேர்ப்பது முதல், விளைந்த பொருள்களை வீட்டிற்குக் கொண்டு சேர்க்கும் வரையில் கால்நடைகளாகிய மாடுகள் இல்லாமல் முடியாது. இந்தியாவின் செல்வமெல்லாம், கால் நடைகளின் க்ஷேமத்தைப் பொறுத்ததாகவே இருக்கிறது. ஆகையால், பயிரிடுக்குடிகள் அடங்கிய இம் மகாநாட்டில் இந்தியாவின் செல்வங்களாகிய கால்நடைகளின் க்ஷேமத்தையுத்தேசித்த மட்டில், அவர்களின் வளர்ப்பின் விதமிப்படியிருக்கவேண்டுமென்பதைப்பற்றி எனக்குத் தெரிந்த மட்டில் என் அனுபவ ஞானத்தையொட்டியும், சாஸ்திரபரிசீலனையை யனுஸரித்தும் சிலவற்றைத் தெரிவிக்கிறேன். விவசாயிகளாய் இங்கு கூடியிருக்கும் கனவான்களும், மற்றவர்களும் இவற்றைக் கவனிக்குமாறு வேண்டுகிறேன்.

### நல்ல மந்தையைச் சேர்க்கும் விதம்

சாகுபடிக்கும், வண்டியடிப்பதற்கும் தேவையான நல்ல ஜாதி மாட்டு மந்தைகளை ஒருங்குசேர்த்து வைத்துக்கொள்ளும் விவசாயிகள் இது சம்மந்தமாய் மூன்று முக்கியமான அம்சங்களைக் கவனித்து நடத்தவேண்டும். நல்ல ஜாதி மாடுகளை உண்டாக்கவழி தேடுதல் ஒன்று; நல்ல ஜாதி மாடுகளைத் தக்கபடி தீனிகொடுத்துப் பரிபாலித்தல் மற்றொன்று. மூன்றாவதாக இந்த நல்ல இனங்கள் சேர்ந்த மந்தையில் உபயோகமில்லாத மாடுகளைக் கழித்தல் மற்றொன்றாகும். ஆனால் இனமில்லாததும் உபயோகமில்லாததுமான மாடுகளைக் கூட்டத்திலிருந்து கழித்தல்தான் இந்த நல்லஜாதி மாடுகள் பெருகுவதற்கு மிகவும் முக்கியமானதாகும். ஆனால் மாடு வளர்ப்போர்கள் அவைகளுக்குப் போதுமான மேய்ச்சலாதாரமில்லாத போதும், பிரயோஜனமில்லாத மாடுகளை ஒதுக்க மனமில்லாத போதும் அதற்கு அவன் வழியேற்படுத்திக் கொள்ள இயலாதபோதும் அவர்கள் மாடு வளர்ப்பது பிரயோஜனமற்றதாகும். அவர்கள் மந்தைகளை வளர்க்கப் பிரயத்தனப்படுவதனால் நினைத்த பலனு மேற்படாது போகும். மாடுகளை வளர்க்கப் பிரியப்படுபவர்கள் மேற்கூறிய விஷயங்களைக் கவனித்து தாம் மேற்கொண்

டகாரியத்தை நடத்த மனமில்லை விடத்து அவர்கள் இத்தொழிலையே மேற்கொள்ளாததே சிறந்ததென்பேன்.

## மாடு வளர்க்கும் வழி

மாடுகளில், முதன் முதலாகப் பல் முளைத்துள்ள பசு கிடாரிகளிலிருந்து தான் பார்த்துப் பொறுக்கி யெடுத்து மந்தைகளை விருத்தி செய்யவேண்டும். தற்காலத்தில் மனிதர்கள் சமூகத்து வந்துள்ள விவாத வயதுமசோதா ஒன்று இவைகளுக்கும் ஏற்படுத்தவேண்டும்.

நல்லஜாதி பசுக்கள் ஒரு வருஷத்திற்கு கன்று போடும். கன்று போட்ட இரண்டுமுதல் 4 மாதத்திற்குள்ளாக சூல் கொள்ள அவை தயாராகும். ஆனால்பசுக்கள் கன்றுபோட்டு இரண்டு மாதகாலத்திற்குள்ளேயே பொலி பருவம் கொண்டாலும் பொலியும்படி விடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். சிலபசுக்கள் சூல் கொண்டவைகளாயிருந்து கன்று போடும்வரை பால் கொடுக்கும்தன்மையனவாயிருக்கும். இப்படிப்பட்ட மாடுகளைப் பார்த்து அவைகள் கன்று போடும்காலம் இரண்டு மாஸமிருக்கும் போதுபார்த்து,பழையபால் வற்றிப்போகவும், புதுப்பால் உண்டாகுமாறும் செய்தால்தான் பால் கொடுக்கும்மடிக்கு இளைப்பாறுதல்ஏற்படும். பசுக்கள் கொழுத்துப் போகும்படி செய்யக் கூடாது,"கோழி கொழுத்தால் முட்டையிடாது"என்பது பழமொழி. அப்படிச்செய்தால், அவை கன்றீனாத மலட்டுப்பசுக்களாக மாறிவிடேது வுண்டாகும். அநேக மாடுகளுக்குப் பிதாவாகும் பொலி எருதுகளைத் தக்கபடி பொருக்கி எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியமென்பேன்-மந்தைகளினுடைய பெருமை யெல்லாம் பொலி யெருதின் வலிமையைப் பொருத்ததாயிருக்கின்றது. மாடுகள் பால்கறக்குமளவு பொலி யெருதின் வமிசத்தைப் பொருந்தியிருக்குமே யொழிய தாய் பசுவின் தன்மையை யொட்டியிராது.

## பொலி காளைகள்.

ஹிந்துக்கள் பொலி எருதுகளாகும்படி தம்வீடுகளில் இறந்தோரின் பெயரைச் சொல்லிக்காளைகளைச் சூலம்போட்டுப் பழைய காலம் முதற்கொண்டு விட்டுக்கொண்டு வருகிறார்கள். சூலம்போட்டகாளைகள் தம்மனம் போனபடி விடப்பட்டு யதேச்சையாய் மேய்ந்து நம் நாட்டிலுள்ள பசுக்களுடன் கூடி, அவை நல்ல ஜாதியையுண்டு பண்ணவே விடப்பட்டிருந்தன. மதத்தின் பெயரைவைத்து விடப்பட்ட காளைகளால் மாட்டின் சமூகத்திற்கு விசேஷ நன்மை ஏற்பட்டு, அதனால் விவசாயிகள் பெரிதும் பயனடைந்திருந்தார்கள். இதனையே நம்

பாகத்திலுள்ள ஜனங்கள் தம்மட்டை எருது என்பார்கள். அத்தம்மட்டை எருதுகள் முற்காலத்தில் மலிந்திருந்த மாதிரி இக்காலத்திலில்லை. இவற்றைக் கோயிலதிகாரிகள் கவனிக்காமலும் பொது ஜனங்கள் கவனிக்காமலும் விட்டுவிட்டதனால், இவற்றைத் தம் வயிற்றுப் பிழைப்பின் நிமித்தம் ஊர்சுற்றித்திரியும் ஒரு ஜாதியார் இம்மாடுகளைப் பிடித்து இவைகளின் கொழுப்பை யடக்கி, அவற்றைத் தம்மனம் போனபடி ஆட்டியும், அவற்றின்மேல் மூட்டை போட்டும் அவற்றினுடையவலுவைக் குறைத்து விடுவதனால இந்த வழியில், நம் நாட்டுக் கால்நடைகளின் வலிவு குறைந்து விட ஆரம்பித்து விட்டது, இந்த மட்டையாடுகளே பெருமாள்மாடாக ஒருவனைப் பிச்சைக்காரன் வசம் அகப்பட்டுத் தவிக்கிறது. இன்னமும் இம்மாதிரியான தம்மட்டைக் கருப்படியான எருதுகளை வாங்கிச் சூலம்போட்டு விடுதலை விட்டுவிட்டு, நம் தற்கால ஹிந்துக்கள் உடம்பு செத்துப்போய் எலும்பும் நரம்புமாயிருக்கிற கன்றுக்குட்டிகளை வாங்கிச் சூலம் போட்டுக்காரியத்தை ஆகப்பண்ணிக் கொண்டு போய் விடுகிறதினாலும் நம் நாட்டுக் கால்நடைகளின் சமூகம் தக்க பொலி எருதுகளில்லாது க்ஷீணித்துவரத்தலைப் பட்டுவிட்டது.

இன்னும் பொலிகாளைகள் பொலிய விடப்படுவதற்கு முன்னால் அவை இரண்டு பற்கள் பட்டதாயிருக்கின்றனவா என்று பார்த்தல் வேண்டும், அல்லது இரண்டரை வயதாயிருக்கின்றனவாவென்று சோதித்தே அவற்றை பொலிகாளையாக உபயோகிக்கவேண்டும். இப்படி உபயோகிக்கப் பட்ட காளைகள் மூன்றாவது வயது முதல் 8வது வயது வரையிலுந்தான் நன்றாகப் பொலிந்து நல்ல ஜாதிகளை உற்பத்தி செய்ய இலாயக்கா யிருக்கின்றன. இப்படி விடப்பட்ட காளைகளின் வயதைப் பதிவு செய்து வைத்திருந்து 8வது வயது வந்ததும் நம்முடைய மந்தைகளி னின்றும் அப்பொலி காளைகளை அவசியமாய் விலக்கி விட மாடு வளர்ப்போர் மிகுதியும் ஜாக்கிறதையாய்க் கவனித்துச் செய்ய வேண்டும்.

தென்னிந்தியாவில் வங்கவோல், அமிருதமஹால், ஆலம்பாடி காங்கயம், ஜாதிமாடுகள் உயர்ந்த ஜாதிகள் என்று பிரக்கியாதி பெற்று பெயர் வாங்கி யிருக்கின்றன. நெல்லூர் ஜில்லாவங்கவோல் ஜாதிமாடுகள் நல்ல கறவை மாடுகள் என்று பிரசித்தி பெற்றிருக்கின்றன, இவைகள் விசேஷமான பாரமுள்ள வண்டிகளை யிழுப்பதிலும் பெயர் பெற்றிருக்கின்றன. நெல்லூர் ஜில்லா வங்கவோலி

ளுள்ள பசுக்கள் தடவைக்கு இரண்டரை பட்டணம் படிபால் கொடுக்கின்றன. இவற்றிலும் மிகவும் சிறந்த ஜாதிபசுக்கள் பட்டணம் 4 அல்லது 5 படிபாலும் கொடுக்கின்றன.

மைசூர் ஜாதி எருதுகள் வேகமாய் நடக்கும் தன்மையுடையன. மிகவும் சுறு சுறு சுறுப்பாய் நடக்கவும் சவாரி வண்டி வேலைக்கு ஒத்ததாகவும் இருக்கின்றன. ஆனல் மைசூர் ஜாதிகளில் நல்ல கறவைப் பசுக்கள் கிடையாது. காங்கேயம் ஜாதி சுறு சுறுப்பாய் வேலை செய்யும் குணமும் பால் கொடுக்கும் குணமும்பொருந்தியவை.

## தீனிகொடுக்கும் முறை

கால் நடைகளுக்குப் போதுமான மேய்ச்சற்றரை ஒவ்வொரு மந்தைக்கும் இருக்க வேண்டிய தவசியமாகும். போதுமான மேய்ச்சல் சாதனங்கள் மாடுகளுக்கு வேண்டியதுடன், மேய்ச்சல் தரை சௌகரியமாயில்லாத போது தேவையான வைக்கோல் முதலிய ஆகாரம் முதலியவைகளைத் தேவையான அளவு முன்னடியே, சேகரித்து வைத்துக் கொள்ள வேண்டும். தவிர, இளம்மாடுகளுக்கு ஏதாவது தகுந்த ஆகாரம் தினமானம் கொடுப்பது என்றசிய மனம் இருக்கவேண்டும். இளம் மாடுகளுக்குத் தினமானம் கொள்ளோ, பருத்திக் கொட்டையோ மணிலாக் கொட்டைப் பிண்ணக்கோ, ஆகாராதிகளுடன் கலந்து கொடுக்கும் நியமனம் இருக்க வேண்டும்.

முன் உப்பு மலிவாயிருந்த காலத்தில் மனிதர்கள் தங்களைப் போல் தங்கள் கால்நடைகளுக்கும் வைக்கோலில் ஏதோ ஓரளவு உப்பு நீர் தெளித்து உணவாகக் கொடுத்து வந்தார்கள். சில அபூர்வமான இடங்களில் அவ்வனுஷ்டானம் இன்னும் இருந்து வருவதாகத் தெரிவதானலும், உப்பு விலை கிராக்கியாய் விட்டதாலோ, அல்லது நம்மைப்போல் மாடுகள் அந்தஸ்துடையவனவல்ல என்பதாலோ, இவ்வனுஷ்டானம் பிரபலமாய் நாம் பார்க்கவில்லை என்றாலும் நமக்கு எவ்வளவு உப்பின் ருசி ஆகாரத்தில் அவசியமாயிருக்கிறதோ அப்படியே மாடுகளுக்கும் அவசியமென்று உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். இவ்வுப்பு கால் நடைகளுக்கு நம்மைப்போல் நல்லுணர்ச்சி கொடுப்பதுடன் அவற்றிற்கு இவ்வுப்பினுல் பல முண்டாவதாகவும் தெரிவதனல் ஒவ்வொரு கால்நடைக்கும் உப்பு ஒரு தோலாவோ இரண்டு தோலாவோ அவசியம் ஆகாரத்துடன் கலந்து கொடுக்க வேண்டுமென்கிறேன்.

நீங்கள் உங்கள் மாடுகளுக்கு மேய்ச்சற்றறை முன்னையைக் காட்டிலும் மிகுதியும் குறைந்து போய் விட்டதென்பீர்கள். காடுகளை கவர்ண்மெண்ட்டார் மாடுகள் புகாமல் ரிஸர்வ் செய்து விட்டார்கள். காடுகளிலிருந்த அடமான நிலங்களாகிய இடத்தில் ரோட்டுகளாகியும் ரெயில்வேக்களாகியும் வாய்க்கால்களாகியும் விட்டதனால் மேய்ச்சற்றறை குறைந்து போய் அவஸ்தைப் படுகிறோம் என்று விவசாயிகள் கூறுவார்கள்.

இப்போது இந்தியாவின் நிலைமையும், பொருளாதார நிலைமையும் மாறிவிட்டது. இவ்வாறு வேறுபட்ட நிலைமைக்குத் தகுந்தாற்போல் நிலங்களும் உங்களுடைய நிலைமையை ஒருவாறு மாற்றிக்கொண்டு காலத்திற்கேற்ற கோலம் கொள்ள வேண்டும். முற்காலத்திலிருந்தது போன்ற மேய்ச்சல் வசதியில்லையென்றும், எல்லாம் வெவ்வேறு விதமாய் மாறிவிட்டனவென்றும் சொல்லிக் கொண்டு நீங்கள் உங்கள் நாட்டின் செல்வமாகிய கால் நடைகளை வளர்க்க முன்வருவதில் பின் வாங்கக்கூடாது. நீங்கள் நம் தேசத்தின் பெருமையைக் காப்பாற்றத்தக்கனவான மேன்மை பெற்ற ஜாதிமாட்டு மந்தைகளை வளர்த்துக் கொள்ளப் போதிய வசதிகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். நீங்கள் எந்தக் காடுகளைப் பாதைகளாகவும், ரெயில் பாதைகளாகவும் வாய்க்கால்களாகவும் மாற்றி விட்டார்களென்கிறீர்களோ, அவற்றின் மூலமாய் உங்கள் மாட்டு மந்தைகளுக்குத் தேவையான வைக்கோல், புல், கொள், புண்ணாக்கு முதலிய பொருள்களைத் தருவித்துக் கொள்ள வழியேற்பட்டிருக்கிறதென்பதை நீங்கள் உணர வேண்டும். அவை எங்கெந்த ஏராளமாய் அகப்படுமோ, அங்கெல்லாமிருந்தும் ரெயில் மூலமாயும் மற்றும் மேற்படி மாறுதலினால் ஏற்பட்ட வசதிகளின் மூலமாயும் உங்கள் மாடுகளுக்குத் தேவையான உணவுப் பொருள்களைத் தருவித்துக் கொள்ள வேண்டும். எந்த வாய்க்கால்கள் ஏற்பட்டதனால், உங்களது மேய்ச்சல் காடுகள் அழிந்தனவென்கிறீர்களோ, அந்த வாய்க்கால்களே உங்கள் நிலங்களின் பாய்ச்சல் ஆதாரமாக மாறியிருக்கிறது. அந்த வாய்க்கால்களினாலேயே நீங்கள் மாட்டுணவையும் புல்வகைகளையும் வேண்டியமட்டும் விருத்தி செய்து கொள்ளலாம். ஏராளமாய்ப் பூர்வ காலம்போல் உங்கள் கால்நடைச் செல்வங்களை விருத்தி செய்வதற்கு உங்களுக்கு மனமிருக்கும் பட்சத்தில் நீங்கள் அதனை இப்போதும் மிகவும் சௌக்கியமாகச் செய்து கொள்ளலாம். ஆனால் பூர்வ

காலம் போலில்லாமல், வேறுவகையான மாதிரிகளை மேற்கொண்டு செய்ய வேண்டியிருக்கும்.

வலுவற்ற மாடுகள் உண்டாகாமல் பார்க்கும் வழி.

எருது இனத்தால் பசுபத்தினித்துவம் கொண்டாடும் என்பதும்கடைசியாகநாம் நம் நாட்டில் வலுவில்லாமலிருக்கும்கால் நடைச் செல்வங்களை விருத்தி பண்ணுமலிருக்க வழியை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்- இப்போது நம்மிந்தியாவில் 100க்கு 99½ வீதமுள்ள மாடுகள் வலிவற்றனவாயிருக்கின்றன. எலும்புந்தோலுமுள்ளவைகளையே விவசாயிகளாகிய நீங்கள் ஏரில்கட்டிவேலைவாங்குகிறீர்கள். அவற்றினுல் விசேஷமான வேலை உங்களுக்கு ஆகின்றனவாவென்று பார்த்தாலும் அதுவுமில்லை- இப்படி வலிவற்ற பசுக்களும், எருதுகளும் நம் நாட்டில் மலிந்து போனதற்குக் காரணம், வலிவற்ற பொலிஎருதுகள் நம் கால்நடைச் செல்வங்களின் சமூகமத்தியிலிருப்பதனுலேயே தான் என்று சொல்வேன்- அப்படிப்பட்ட வலிவற்றபொலி எருதுகளை நம் நாட்டுக் கால்நடைச் செல்வங்களின் மத்தியிலிருந்து உடனே நீக்கிவிடவேண்டும், இந்த மாதிரியான வேலையை இப்போது மிருகவைத்திய இலாகாதார் செய்து வருகிறுர்கள். வலுவற்ற மாடுகள், மாடுகளின் சமூகங்களில் புகுந்து பொலியா வண்ணம், அவற்றின் காய்களை எடுத்து வரும் வேலையை இவர்கள் துவக்கியிருக்கிறுர்கள். பல நாட்டு மாடுகள் ஒரு பொதுவான மேய்ச்சற்றறையில் மேயும்படியான சமயங்கள் அடிக்கடி நேரும். இந்நாட்டில் இம்மாதிரி எருதுகளின் காய்களை எடுத்து வைப்பதனைக் காட்டிலும் மேலான தொன்றுமில்லை- இதனுல் வலிவற்ற மாடுகளின் சக்தி நம் நாட்டு பல மர்தைகளினிடையில் பலிக்காது போய் விடுவது மிகவும் முக்கியமான விஷயமாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். இப்படிப் பொலி எருதுகள் தவிர மற்றைய எருதுகளின் காய்களை அடித்து விடும்படி ஏற்பாடு செய்வதனுல், மாடுகளின் ஜாதிவிருத்தியடைவதற்கு வழிகள் ஏற்படுவதுடன் காய் எடுபட்ட மாடுகளின் சக்தி அதிகமாகி விவசாயிகள் இதனுல் விசேஷ விவசாய வேலைகளைச் சொற்பச் செலவில் செய்து பெரிய பலன்களையடைய இடமுமுண்டாகிறது. இந்தக் காய் எடுக்கும் வகை முன் மாதிரியிலிருந்து இப்போது முற்றிலும் வேறுபாடடைந்திருக்கிறது. பர்டிஸோ முறையென்று ஒன்று கண்டு பிடிக்கப்பட்டு அதன்படி செய்வதனுல், மாடுகளின் காய்களினுள்ளே யூடுருவிச் செல்லும் நரம்புமட்டும்

சிதைக்கப்பட்டு விதைகள் முன்னிருந்தவாறே இருக்க விடப்படுகின்றன.

## கால்நடை வளர்க்க ஐக்கிய சங்கங்கள்

இங்கிலாந்து தேசம் முதலியவைகளில் விவசாயத்திற்குபயோகமான ஐக்கிய நாணயசங்கங்களிருந்து விவசாயிகளுக்கு நன்மை பளிக்கின்றன. இந்தியா போன்ற நம் நாடுகளில் அந்த சங்கங்கள் இல்லாமற் போகவில்லை. இந்நாடுகளில்உள்ளவைகள் விவசாயத்திற்கே யன்றி வேறு வகைகளிலுள்ள கடன்களை யளித்துக் குடியானவர்களுக்கு ஐக்கிய சங்கங்கள் உபயோகமாயிருக்கவில்லை என்று இங்கு நான் சொல்வதற்குத் துணியவில்லை. பல விஷயங்களால் உபயோகமாகும் இச்சங்கங்களில் மாடு வளர்க்கும் தொழில் எவ்வளவு தூரம் அதிகமாய் விருத்தியாக்கக் கூடியதாயிருக்கும் என்று நீங்களே யோசித்துப் பாருங்கள். ஆகவே இந்தச் சமயத்தில் குடியானவர்களாகிய--கிருஷிகர்களாகிய நீங்கள் மாடு வளர்ப்பதில் மட்டும் பிரயோஜனமாயிருக்கும் ஐக்கிய சங்கங்கள் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும், கிராமங்கள் தோறும் இம்மாதிரியான சங்கங்கள் ஏற்பட்டு மாடு வளர்க்குந் தொழில்மட்டும் இச்சங்கங்களின் மூலதனம் உபயோகமாகத் தகுந்த சங்கங்களை யேற்படுத்திக் கொண்டு மாட்டு மந்தைகளை வளர்த்தற்கான மார்க்கங்களைச் செய்து கொண்டு விவசாயத்திற்கடிப்படையான கால்நடைகளின் வமிசத்தை எவ்வெவ் விதமாய் விருத்தி செய்யலாமோ அவ்வவ் வகையிலெல்லாம் முயன்று பாடுபட்டு நீங்களும் அதனால் சௌக்யமடைந்து இந்தியா பெரிய விவசாய தேசம் என்ற முன்காலந் தொட்டு பெற்ற பெரும்பெயரைக் காப்பாற்றி முன்னுக்குக்கொண்டு வருமாறு வேண்டுகிறேன்.

வி. சுப்ரமணிய ஐயர்
தமிழ் பண்டிதர், டேனிஷ் மிஷன் ஹைஸ்கூல்
திருவண்ணாமலை

## Correspondence

### கடிதம்

கனம் கிருஷிகன் பத்திராதிபர் அவர்களுக்கு
சித்தாரார் டி. கெ. சுந்தரராஜய்யர் எழுதியது.

நாங்கள் தஞ்சாவூர் ஜில்லா குருவை நெல்லில் மாவுக்கு (100 குழி 6 மரக்காலும் சம்பாவுக்கும், இருபோகத்திற்கும் (2-வது பயிர்) 4மரக்காலும் விரையாக உபயோகப் படுத்துகிறோம். தங்கள் பத்திரிகையுங்

படித்ததிலிருந்து விரையை இன்னும் குறைத்து விடலாமென்று தோன்றுகிறது, தங்கள் அனுபோகத்திலிருந்து எவ்வளவு விரை உபயோகிக்கலாமென்று தயவுசெய்து தெரிவிக்கவும்.

எனக்கு என் தோட்டத்தில் வேலிக்கு உபயோகிக்கும்படியாக கொடுக்காபுளிவிதைதேவை- 5 மா அல்லது ஒன்னேமுக்கால் ஏக்கருக்கு எவ்வளவு தேவையென்றும் தங்களால் எப்பொழுது எனக்கு அனுப்பமுடியுமென்றும் விலையும் குறித்து எழுதவும். தங்கள் பதிலைத் தெரிந்துகொண்டு பணம் அனுப்புகிறேன். தங்கள் பதிலுக்காக இத்துடன் 1 அணு ஸ்டாம்பு அனுப்பி இருக்கிறேன்,

இப்படிக்கு

டி. கே. சுந்தரராஜன

பதில்

தங்களுடைய 17_5.29 லெட்டரில் தஞ்சாவூர் ஜில்லாவில் குருவை நெல்லில் மாவுக்கு (100 குளி) 6 மரக்காலும் சம்பாவுக்கு இருபோகத்திற்கும் 4மரக்காலும் விதையாக உபயோகப்படுத்துகிறார்களென்றும் விதையை இன்னும் குறைத்து விடலாமா என்றும் கேட்கிறீர்கள். தாங்கள் விதைப்பு செய்து பயிர்செய்யவிரும்புகிறீர்களா அல்லது நாத்தங்காலில் நாத்துவிட்டு அதை எடுத்து நட்டுப் பயிர் செய்ய விரும்புகிறீர்களா, என்று தெரிவிக்கவில்லை' விதைப்புக்கும் நடவுக்கும் உபயோகிக்கும் விதையின் அளவு எங்கும் வித்தியாசப் படுவதுண்டு'

தஞ்சைஜில்லாவில் ஒரு மாக்கால் என்பது இரண்டு பட்டணம் படிதான். தஞ்சை ஜில்லாவில் 3 மா என்பது ஒரு ஏக்கர்; அதாவது நூறு செண்டுநிலம்- ஆகவே ஒருமா என்பது அநேகமாய் 33 செண்டு நிலம்- இதற்கு 6 மரக்கால் அதாவது பன்னிரண்டு பட்டணம்படி விதை உபயோகிப்பதாகத்தெரிவிக்கிறீர்கள்- விவசாயடிபார்ட் மென்டாரால் 8செண்டுநிலத்தில் பத்து பட்டணம்படி நெல்விதைத்து நாற்றுப்பாவி அதை எடுத்து ஒரு ஏக்கரா நிலத்தில் ஒன்று இரண்டு நாற்றுகளாய் வைத்து நட்டு தக்கபலன் கிடைத்திருக்கிறது. ஒரு ராத்தல் நெல்விதையை கிருத்து எண்ணிப் பார்த்தால் அதில் நெல் தினுசுக்கு தக்கதாக 18 ஆயிரம் முதல் 27 ஆயிரம் நெல் இருக்கிறதாகத் தெரியும், 627264 சதுரஅங்குலம் கொண்டது ஒரு ஏக்கரா நிலம். 4 அங்குலம் விட்டு கார்நெல்லையும் 6 அங்குலம் விட்டு சம்பா நெல்லையும் ஒவ்வொரு முதலாய் நடவேண்டுமென்றால் இவ்விஸ்தீரணத்தில் கார் 39204 செடிகள்தான் நடக்கூடும். சம்பா நெல் இதைவிட குறையும். ஒரு இராத்தல் நெல்லில் 18000 நெல் விதைகளாவது இருப்பதாலும் ஒருபடிக்கு இரண்டே முக்கால் இராத்தல் இருப்பதாலும் ஒரு பட்டணம்படியிலிருக்கும் கார் நெல் எல்லாம், சாவி சண்டு மண்ணல் பாடுவாசி

இல்லாமல் முளைத்தால் ஒரு ஏக்கரா விஸ்தீரணம்நட போதுமென்று நன்ருய் விளங்கும், ஆகையால் நூறு குளி விஸ்தீரணத்தில் 6மரக்கால் விதம் விதைப்பது ஜாஸ்திதான்என்றே எண்ணவேண் டியிருக்கிறது. நாளாவட்டத்தில் கொஞ்சம் கொஞ்சமாய் விதையை இடங்களுக்கும் எருச் செய்வதற்கும் தக்கவாறு குறைத்துக் கொள்ளக்கூடும். இன்ன இடத்தில் இன்னமாதிரிதான் செய்ய வேண்டுமென்று திட்டமாய்ப் பரிட்சைசெய்து பார்த்தபின் தான் அவ்விடத்திற்கு சொல்லக்கூடும்,வெள்ளம்அடிப்பதானுல்சற்று அதிகம் நடவேண்டிவரும்.

கொடுக்காபுளி விதை இத்தருணத்தில் தான் கிடைக்கும்- விதைகிட்டமாய் ஒன்னேமுக்கால் ஏக்கருக்கு எவ்வளவுதான் வேண்டுமென்பது நிலத்தைப்பொருக்கும். என்ருலும்பத்து முதல் பதினைந்து படிவிதை இருந்தால் போதுமென்பது பொதுவான அபிப்பிராயம் கொள்ளலாம். ஒருபடி விலை சென்னைக்கருகாமையில் சாதாரண காலங்களில் 4 முதல் 6 அணு ஆகக்கூடும். பாக்கிங் ரெயில்வே சார்ஜ் பிரத்தியேகமாகக் கணக்காகும்- விதைவேண்டுமானுல் மானேஜர் கிருஷிகன்ஆபீசுக்குமுன்பணம் அனுப்பினுல் அவர் வாங்கி அனுப்பக்கூடும்.

ப.ர.

கனம் தங்கிய கிருஷிகன் பத்திராதிபர் அவர்கள் சமுகத்திற்கு

அன்பும் பரோபகார சிந்தையுமுள்ள ஐயா!

அநேகநமஸ்காரம். எனக்கு செம்மண் நிலம் இருக்கிறது-அதில் கிணர் ஒன்றிருக்கிறது, அந்நிலத்தில் 5 அல்லது 6 ஏக்கரில் எலுமிச்சை செடிகளை வைத்துப் பயிர்செய்ய உத்தேசிக்கிறேன்- விதையை எந்தமாதிரி மரத்தின் பழத்திலிருந்து பொருக்கி எடுக்கவேண்டும்? நாற்று எப்படி பாவவேண்டும்? பின் எவ்வளவு தினத்திற்குள் கூசாக்களில் எடுத்து வைக்கவேண்டும்? கூசாவில் என்ன உரம் போடவேண்டும்? நாற்றுப்பாவும்போது என்ன உரம் போடவேண்டும்? கூசாவில் செடி எவ்வளவு காலம் பூமியில் நடுவதற்கு முன் இருக்கவேண்டும்? செடிகளை எவ்வளவு தூரத்தில் எவ்வளவு ஆழக்குழியில், என்ன உரம்போட்டு நடவேண்டும்? நடுவதற்கு முன் நிலத்தை எவ்வாறு பக்குவப்படுத்தவேண்டும்? நட்டபின் செடிகளுக்கு தண்ணீர் விடும்முறை எப்படி? கூசாவிலிருக்கும் செடிகள் வெளியிலிருக்கலாமா? அல்லது மேல் மறைவு வேண்டுமா? செடியை நட்டபின் இடைவெளியில் வேறு காய்கறி தினுசுகள் பயிர் செய்யலாமா? மேற்கண்ட வினுக்களுக்கு தயவுசெய்து விடையளிக்கக் கேட்டுக் கொள்ளுகிறேன்.இதற்கு முன் தங்கள் கிருஷிகன் சஞ்சிகையில் எலுமிச்சையைப்பற்றி வியாசமெழுதியிருந்தால் அச்சஞ்சிகையும் அனுப்பக் கேட்டுக்கொள்கிறேன். நல்ல விதைகள் எவ்விடம் கிடைக்கு

மென்பதையும் தெரிவிக்கக் கேட்டுக் கொள்கிறேன்' அநேகவந்தனம் தங்களுக்குச் சமர்ப்பிக்க கடமைப் பட்டிருக்கிறேன்

வி. பி சின்ன வெங்கட்டராஜு
பிரசிடெண்ட் கோஆபரேடிவ் சூபர் வைசிங் யூனியன்லிமிடெட்

பதில்

தங்களுடைய 3—6—29 காகிதம் கிடைத்தது- நல்ல தினுசு எலுமிச்சை நாற்றுகள் அம்பாசமுத்திரத்திற்கு பக்கத்திலிருக்கும் கடயம் கிராமத்தில் கிடைக்கும், தாங்கள் ஷை யூருக்குப்போய் நேரில் பார்த்து வாங்கி வரவும். தாங்களே நாற்று விட வேண்டுமானாலும் நல்லபழங்கள் அவிடம் கிடைக்கிறது, அதை தருவித்து நாற்றுவிட்டு சுமார் 3 வருஷங்கள் கழித்தபின் தங்கள் நிலங்களில் பயிர்செய்வது நலம், எலுமிச்சமரங்கள் 12 அல்லது 15 அடிக்கொரு மரமாக வைக்கவேண்டும், இளஞ்செடியாக யிருக்கும்போது, காய்கறி தினுசு பயிர்கள் செய்து கொள்ளலாம், இளஞ்செடியாக விருக்கும்போது பச்சைபுழு இலையுடன் ஒட்டிக்கொண்டு இலையைத்தின்று காம்பாக்கிவிடும். இவைகளை அதிகாலையில் கவனித்தால் தெரியும், இத்தப்பயிரைப்பற்றிய முழுவிபரங்கள் அவ்விடத்திலேயே கேட்டுத்தெரிந்து கொள்வலாம், அதற்கப்பாலும் தங்களுக்குச் சந்தேகமிருந்தால், எங்களுக்கு எழுதினால் பதில் விவரமா யெழுதுகிறோம் கடையத்தில் ஸ்ரீமான் நாராயணபிள்ளை, சக்கரராயர் இவர்கள்தோட்டங்களைப்பார்ப்பது நலம்,

ப.ர.

கிருஷிகன் பத்திராதி பாவர்கள் சமூகத்திற்கு

அன்புள்ளஐயா;

எனது தோட்டத்தில் 200 மொந்தன் வாழைபயிர் செய்திருக்கிறேன் ஷை வாழை1927 டிசம்பர் 15ல் நடப்பட்டது நிலம் சுண்ணாம்பு சரள், சில இடங்களில் கொஞ்சம் களர் சம்பந்தம் உண்டு. மரம் 1க்கு 30 முதல் 50 காய்கள் தான் இருக்கிறது. மரம் 7-8 அடிஉயரம் வளர்ந்திருக்கிறது, இதில் 60 மரம் பூவே வாவில்லை. இது இப்படி இருக்க, சுமார் 100மரம் வரையில் இலைகள் அடியிலிருந்து அதாவது நீளத்தில் செங்க நுனியிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாகக்காய்ந்து கொண்டு வருகிறது, பாதி, முக்கால்பாகம் காய்ந்தும் மற்றவை நடுத்தண்டின் ஓரமாக பச்சையாக இருக்கிறது. தயவு செய்து இது விபரத்தையும் பரிகார மிருந்தால் அதையும் தெரிவிக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்,

(2) மூன்று அடி ஆழம் அகலம் குழி வெட்டி குழியில் வண்டல் மண் குப்பை, கிணர் வெட்டிய உதிர் மண். உழவுமண் சாணி, இவைகளை மாரி மாரி ஒவ்வொருதடவையாக கொட்டிமத்தியில் எருக்குஆவாரை தழைகள் போட்டு குழியை நிரப்பி ஒருவீசை எலும்பும் போட்டு சேலத்தில் வாங்கியு

குண்டு, நடுச்சாலே, என்னும் ஒட்டு மாஞ்செடி 2- மாதிரிக்காக சென்ற அக்டோபரில் வைத்தேன்- பிறகு மாதம் ஒருதரம் கொத்தி, தழை; சாணிஎரு கொட்டை முத்துப் புண்ணாக்கும் வைத்துக் கொண்டு வருகிறேன். ஒருதயா மாட்டிறைச்சியும் செடி 1க்கு 1வீசை வைத்தேன்.

ஒரு செடி 5.6- இலைதளிர் விட்டிருக்கிறது. இப்போது விடும் துளிர் கருகிப் போய் விட்டதும் தவிர, தழைகள் சிலது கால்பாகம் அரைபாகம் காய்ந்தும் வருகிறது,

இன்னொரு செடியில் நட்டவுடன் 3குலேதளிர் விட்டது.பிறகு நாளது வரையில் துளிரே விடவில்லை. முதலில் விட்ட இலைகளில் 4-5, இலே கொஞ்சம் கொஞ்சமாகக் காய்ந்து கொண்டு வருகிறது. வாரத்திற்கிரண்டு தண்ணீர் பாய்ச்சுகிறேன். தயவு செய்து இது விபரத்தையும் பரிகாரத்தையும் தெரிவிக்கவேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

(3) நாட்டு பூசனிஅல்லது கல்யாணப்பூசனி (சாம்பல்பூசணி அல்ல) பயிர்செய்திருக்கிறேன். அதில் ஏராளமாக பிஞ்சு விடுகிறது விட்டபிஞ்சுகளெல்லாம் அழுகி கெட்டுப் போய் விடுகிறது. ஓரடி இரண்டடி சுற்றளவுள்ள காய்களும் அழுகிக் கெட்டுப் போய் விடுகிறது, 10க்கு ஒன்று கூட தேறுவது கஷ்டமாக இருக்கிறது- அதின் விபரமும் பரிகாரமும் தயவு செய்து தெரியப்படுத்த வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

அடிக்கடி தங்களுக்கு ஸ்ரமம் கொடுப்பதற்காக மன்னிக்க வேண்டுமாய்த் தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன்

வந்தனம் தங்கள் அன்புள்ள

க. சுவெங்கிட சுப்பா செட்டி

பதில்

கிருபநேயர் வாழை விஷயத்தைக் குறித்துக் கேட்டிருக்கும் சந்தேகத்தை நிவர்த்திக்கப் போதுமான தகவல் அவர்களுடைய லெட்டரில்லை, அக்காரணத்தால் பொருத்தமுள்ள ஜவாபு கொடுக்க இயலவில்லை. நிலம் சுண்ணாம்புகள் சில இடங்களில் கொஞ்சம் களர் சம்பந்தம்' என்று சொல்லி இருக்கிறதே தவிர மேல் மண் 8அங்குலம் வரை என்னதினுசு, கீழ் மண் எவ்விதம் என்று சொல்லவில்லை, என்ன எருச்செய்து வாழை நடப்பட்டது என்றும் சொல்லவில்லை எப்படி பருவம் செய்யப்பட்டதென்றும் கூறப்படவில்லை; இவ்விஷயத்தில் இதற்கு முன் என்ன பயிர் இருந்தது என்றும் சொல்லப்படவில்லை. இறைக்கும் ஜலம் நல்ல ஜலமா அல்லது உப்பு ஜலமா அல்லது சப்பைத்தண்ணீரா என்றும் குறிக்கப்படவில்லை- வாழைக் கன்கள் எல்லாம் குலை போட்ட வாழைகளிலிருந்து பெயர்த்து நடப்பட்டவையா அல்லது குலை போடாத வாழைகளிலிருந்து நடப்பட்டவையா என்ற விவரமும் சொல்லப்படவில்லை இத்தியாதிவிஷயங்களைத்தெரிவித்திருந்தால் அநேகமாய் எவ்விஷயத்தினுல் உண்டாயிருக்கக் கூடுமென்று கூடியவரை பொருத்தமான

ஜவாபு எழுதி இருக்கக்கூடும் என்றாலும் 1927ம் டிஸம்பர் மாதம் 15ம் தேதி நட்ட வாழைகளில் இன்னும் சமார் 3ல் ஒருபாகம் பூவே வா(வி)ல்லே யென்று எழுதியிருக்கும் விஷயத்தை யோசித்துப் பார்க்கும்பொழுது நட்டதினுசு மொந்தன் வாழைதான் என்று யோசித்துப்பார்க்கும்போது இந்தினுசு சாதாரணமாய் ஒரு வருஷத்திற்குள் இடப்பாடியையொத்த இடங்களில் குலை போட்டிருக்கவேண்டும். குலை போடாத வாழைகளிலிருந்து கன்றுகளை பெயர்த்து நட்டால் அப்பேற்பட்ட சந்தர்ப்பங்களில் அவ்வாழைகளில் பூவும் குலையும் விழ சாதாரணமாய் 18 முதல் 20 மாதம் வரை பிடிக்கிறதுண்டு. ஆகையால் நிருபநேயர் நட்டவாழைகளெல்லாம் குலைபோட்டவாழைகளிலிருந்து பெயர்த்து நடப்படவில்லை யென்று யூகிக்க இடங்கொடுக்கிறது.

குலைபோட்ட மரங்களில் மரமொன்றுக்கு 30 முதல் 50க்கு மேல்காயில்லே என்ற விஷயத்தை யோசித்துப் பார்க்கும் பொழுது வாழையை சரியானபடி பருவப்படுத்தி நடவில்லை என்றும் சரியான காலத்திற்குள் எருச் செய்யவில்லை என்றும் நினைக்கவேண்டியிருக்கிறது.

ஒரு வேளை சற்றுப் பருவப்படுத்தி எருச் செய்திருந்தாலும் அத்துடன் செய்த ஊடு பயிர்களால் கிரகிக்கப் பட்டிருக்க வேண்டுமென்றும் எண்ண இடங்கொடுக்கிறது. வாழைப்பயிருக்கு வாழைநட்ட 3மாசத்திற்குள் அப்பயிருக்குக் கொடுக்க உத்தேசித்திருக்கும் எருப்பூராவையும் 3 தடவைக்கு மேல் போகாமல் வைக்க வேண்டியதவசியம். நட்ட 3 மாசத்திற்குப் பின் அப்பயிருக்கு எவ்வளவு ஜாஸ்தி எருச்செய்திருந்தாலும் அதன் முதல் மாசூலுக்குப் பிரயோஜனப்பட மாட்டாது. வாழையிலிருந்து இலைகள் அறுத்திருந்தாலும் அல்லது ஒரு வாழையைச்சுற்றி கன்றுகள் ஒன்று இரண்டுக்கு மேல் விடப்பட்டிருந்தாலும் குலைகளின் காய் ஜாஸ்தியாய் இருக்கமாட்டாது, வாழைகளை 7 முதல் 8 அடி இடைவிடாமல் நெருக்கி நட்டிருந்தாலும் காய் ஜாஸ்தி காய்க்கமாட்டாது அநேகமாய் மொந்தன் தினுசு வாழையில் 75 முதல் 80 காய்களுக்குமேல் குலையில் அகப்படுவது சாதாரண காரியமல்ல. இலைகள் நுனியிலிருந்து நீளத்தில் காய்ந்துகொண்டு வருகிறது, நிருபநேயர் குறிக்குமிடத்தில் இரண்டு காரணங்களால் உண்டாயிருக்கக்கூடும். உப்பு சம்மந்தப்பட்ட பாகத்தில் நடப்பட்ட வாழைகள் அநேகமாய் இம்மாதிரி ஆவதுண்டு; அல்லது உப்புத்தண்ணீர் பாய்ச்சி பயிரிட்ட வாழைகள் இம்மாதிரி கதி அடைவதும் உண்டு. இது அநேகமாய் தண்ணீர் ஜாஸ்தியாய் இருக்கும்போதும் மழைகாலங்களிலும் அநேகமாய் தெளிவாய்த்தெரிய மாட்டாது. வெயில் காலங்களிலும் மழைஇல்லாக் காலங்களிலும் கீழ் மண்ணில் கரைந்து கீழ்படைகளில் இருக்கும் உப்பானது தண்ணீருடன் வெயிலின் கொடுமையினால் மேல் நோக்கி வரும்பொழுது அதன் பாதை வேர்களுக்கு உண்டாகி

இம்மாதிரி ஆவது சகஜம், ஆகையால் இக்காரணங்களில் எந்தக்காரணத்தினுல் இவ்விதம் ஆயிருக்கிறதென்று நிரூபரேயரே யூகித்தறியவேண்டும். இலை காய்ந்துகொண்டு வரும் மரங்களுக்கு நல்ல தண்ணீர்கொஞ்சம் ஜாஸ்தியாய்ச்சி வந்தால்சற்று குணம் கிடைக்கலாம்.

வண்டல் மண், குப்பை கிணறு வெட்டியமண் முதலியவைகளை மாறி மாறிக்கொட்டி அவைகளுடன் தழைகளையும் போட்டு குழிகளை நிரப்பி எத்தனை நாள் மக்கியபின் நடப்பட்டதென்று தெரியவில்லை திருஷ்டாந்தரமாக வண்டல் மண்ணை மூன்று நாலுமாசம் ஆறு குளங்களிலிருந்து எடுத்தபின் காற்றோட்டம் அடைந்து ஆறி சிற்றுயிர்களால் அம்மண் பக்குவமடையுமுன் அதை எருவாய் உபயோகித்தால் அதனுல் கெடுதி உண்டாவது வழக்கமே ஒழியபலன் கிடைப்பதில்லை இதற்காகத்தான் விபவவருஷம் பங்குனிமாதம் சஞ்சிகையில் இவ்விஷயத்தைக் குறித்து சுதேச கிருஷிகர் செய்யும் விஷயத்தை சவிஸ்தாரமாய் எழுதப்பட்டிருக்கிறது' நிருபரேயர் நட்டிருக்கும் ஜாதிமா வருஷா வருஷம் காய்கிற ஜாதியல்ல, மேலும் நிருபரேயர் டேமூன் செய்திருக்கும்எரு வேசெடி நட்ட. ப வருஷங்களுக்குப் போதுமானது மாதமாதம் காய்ப்புவரும் வரை எருவைத்தல் அனுவசியமென்றும் மாட்டிலை ச்சிவைத்துக்கொண்டு வருவதுவும் தற்காலம் வைப்பதும் சரியல்ல வென்பதும் எமது அபிப்பிராயம்: அளவுக்குமிஞ்சினுல் அமிர்தமும் நஞ்சாம் என்ற பழமொழியை நமது நிருபரேயர் சற்று யோசித்துப்பார்க்க வேண்டும்' சில சந்தர்ப்பங்களில்செடியில் இலைகளும் துளிர்களும் காய்வது காற்றின் கொடூரத்தினுல் சம்பவிக்கிறதுண்டு. இப்பேர்ப்பட்ட சந்தர்ப்பங்களில் காற்றுக்கு உள்படும் பக்கத்தில் மாத்திரம் இந்தமாதிரி நடப்பதுஉண்டு காற்றுகாலம் மாறினவுடன் மரம் தெளிர்ந்துவிடும்.

கோடைக்காலப் பூசினி மழைக்காலப் பூசினி என இருவகை உண்டு ஒரு காலத்தில் காய்க்கும் பூசினி விதையை மற்றொரு காலத்தில் நட்டால் பிஞ்சுகள் அழிகிப் போகிறதும் உண்டு சில இடங்களில் முற்றும் பழுத்து பக்குவ மடையாத பூசணியின் விதையை வாங்கி அல்லது சேகரித்து நடுவதாலும் இப்பேர்ப்பட்ட கெடுதி நடப்பதும் உண்டு. அழுகி கெட்டுப் போய்க் கொண்டிருக்கும் பிஞ்சுகளில் ஒன்று இரண்டை கிராமவாசிகளின் பஞ்சாங்கத்தில் சொல்லியபடி கோயம்பூத்தூரில் இருக்கும் விவசாய காலேஜ் பூச்சி சாஸ்திரி பூஞ்சான சாஸ்திரி ஆகிய இருவர்களுக்கும் மாதிரி அனுப்பி விவரம் தெரிவிக்கும்படி கேட்டாலாவது அவர்களையேவந்துசுற்றிப் பார்த்து சிகிச்சை தெரிவிக்கும்படி கேட்டுக் கொண்டாலாவது அவர் தன்வேண்டியஉதவி புரிவார்கள் என்பது எமது நிச்சயமான கொள்கை

பூர்.

கிருஷிகன் பத்திருதிபரவர்களுக்கு.

அநேக வந்தனம் என்னுடைய இலுமிச்சந்தோட்டத்திலுள்ளமரங்களை ஒருவித புழு குடைந்து இரண்டடிமூன்றடிநீளத்திற்கு தமரடித்துபொடியை வெளியே தள்ளிவிடுகிறது ஒட்டுமாகண்களின் இலைகள் சுருண்டு விடுகிறது ஒட்டுமரங்களை மேற் சொன்ன மாதிரியாகவண்டு துளைக்கிறது மற்றதைவிடகாலைந்து மடங்கு பெரிதாகவும் ஒருவித வண்டுபோலவுமிருக்கிறது இவைகளுக்கு பரிகாரமுண்டானால் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

தாங்கள் வீரகேரலம்புதூர் பக்கம் வந்திருக்கிறதாக இப்போதுதான் அறிந்தேன். தாங்கள் எவ்வளவுகாலவதாமசமுண்டு? விலாசமென்ன? தங்களை வந்துதெரிசித்து சில விஷயங்களைப்பற்றி தெரிந்து கொள்ள ஆவலதிகம் எனக்கு சுரண்டைக்கு மேல்புரம் 200ஏக்கர் காடுகளிருக்கிறது.

நீ. சுப்பய்யதேவர்.

பதில்

அன்பார்ந்த ஐய்யா,

தாங்கள் 9—5—29ல் எழுதிய போஸ்டுகார்டும் காகிதமும் வீரகேளம்புதூரிலும் இங்கும் முறையே கிடைத்தன.

நான் அநேகமாய் ஜூலைமாசம் முதல் வாரத்திலிருந்து ஒருமாசமாவது வீரகேளம்புதூரில் தங்குவேன், நான் அங்கு வந்திருக்கும்போது சுரண்டைக்கு மேல்புறத்தில் இருக்கும் தங்களுடைய நிலவிஷயமாய் முன்கூட்டி எழுதிநீர்மானித்துக்கொள்ளும் தேதியில் சுற்றிப்பார்த்து ஆலோசனை சொல்லக்கூடும். ஆகையால் ஜூன்மாதம் கடைசியில் இவ்விஷயத்தைக்குறித்து ஞாபகப்படுத்தினால் தங்களுக்கு எழுதக்கூடும்.

தங்களுடைய கடிதத்தில் குறிபபிட்டிருக்கும்எலுமிச்சம் செடிகளுக்கும் ஒட்டுமா கன்றுகளையும் குடைந்து தமரடித்து பொடியை வெளியே தள்ளும் நோய் கொடியையும் பூச்சிபாதையையும் குறித்து கோயம்புத்தூர் விவசாய காலேஜில் இருக்கும் பூச்சிசாஸ்திரி (கவர்மெனட் என்டமாஜிஸ்ட்) அவர்களுக்கு உடனே மனுச்செய்து கொண்டால் அவர்கள் வந்து சுற்றிப்பார்த்து யாதொரு செலவிலல்லாமல் தக்க ஆலோசனை சொல்வார்கள், பரிகாரமும் நிவர்த்தியும் சரியானபடி சித்திக்கும். ப. ர்.

## SILK COTTON SEEDS AVAILABLE

## இலவம்பஞ்சு விதைகள் தயார்

இப்பொழுது சுமார் 20 ராத்தல் இலவம்பஞ்சுவிதைகள் தயாரித்து வைத்திருக்கிறோம். நமது சந்தாதாரரில் தேவையானவர்கள் எழுதினால் ஒவ்வொருவருக்கு அரை இராத்தல் விதைக்கு அதிகப்படாமல் இனமாய்க் கொடுக்க உத்தேசித்திருக்கிறோம். அன்ரிஜிஸ்டர் பார்சலாய் ஷை அரைராத்தல் விதைகள் அனுப்புவதானால் போஸ்ட்டேஜ்ஜுக்கு 3 அணாவும் பாக்கிங் 1 அணா ஆக 4 அணா தபால் பில்லைகளும் ரிஜிஸ்டர் பார்சலாய் அனுப்புவதாகில் 6 அணா தபால் பில்லைகளும் மானேஜருக்கு அனுப்பவும். ப. ர்.

# "கிருஷிகன்" பஞ்சாங்கம்

சுக்லஹூ ஆடிமீ—சாலிவாகன 1852, கலியுகாதி 5031 பசலி 1339

கொல்லம் 1104. இங்கிலீஷ் 1929ம்ஹூ ஜூலை_ஆகஸ்ட்மீ

| ஜூலைமீ | ஜுலைமீ | ஆடி | வாரம் | திதி | நக்ஷத்திரம் | யோகம் | விசேஷங்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| 8 | 16 | 1 | செ | தச 26-12 | விசா39:58 | ம40சி | ஆடிபண்டிகை |
| 9 | 17 | 2 | புத | ஏகா29-33 | அநு45-14 | சி60 | கரிநாள் |
| 10 | 18 | 3 | வி | துவா 33-47 | கே51-12 | சி60 | விவகாரம் ஆரம்பிக்க |
| 11 | 19 | 4 | வெ | திர 38-33 | மூல57-34 | அ58சி | கிருஷியாரம்பிக்க |
| 12 | 20 | 5 | சனி | சது 43-24 | பூரா60.0 | சி60 | கரும்புநட |
| 13 | 21 | 6 | ஞா | ○ ப48-2 | பூரா3-56 | சி4அ | வியாசபூஜை |
| 14 | 22 | 7 | தி | பிர52-7 | உத்ர9:56 | ம10அ | எள்ளுவிதைக்க |
| 15 | 23 | 8 | செ | துதி 55_21 | திரு15-17 | சி60 | ஓமசாந்தி செய்ய |
| 16 | 24 | 9 | புத | திரு 57_21 | அவி19.40 | ம20சி | மாடுவாங்க |
| 17 | 25 | 10 | வி | சது 58-12 | சத 22-53 | ம23சி | கரிநாள் |
| 18 | 26 | 11 | வெ | பஞ்57-41 | பூர24-53 | சி60 | ஏற்றம் ஸ்தாபிக்க |
| 19 | 27 | 12 | சனி | சஷ் 55-53 | உத்25-37 | சி26ம | கிருஷியாரம்பிக்க |
| 20 | 28 | 13 | ஞா | சப் 53-3 | ரே25-12 | அ25சி | மூகூர்த்தநாள் |
| 21 | 29 | 14 | தி | அஷ்49-10 | அசு23_45 | சி60 | தானியம் செலவிட |
| 22 | 30 | 15 | செ | நவ 44-31 | பர*21.23 | சி60 | படர் பயிரிட |
| 23 | 31 | 16 | புத | தச39-10 | கிரு18-19 | அ18சி | மாடுவாங்க |
| 24 | 1 | 17 | வி | ஏகா 33-27 | ரோ14-41 | ம60 | உழ |
| 25 | 2 | 18 | வெ | துவா 27-29 | மிரு10 47 | சி60 | சீமந்தம் செய்ய |
| 26 | 3 | 19 | ச | திர21-24 | திரு6_43 | சி60 | குளைபோட |
| 27 | 4 | 20 | ஞா | சது ● 15-23 | புன2_37<br>பூச56_6 | சி60 | கரிநாள் |
| 28 | 5 | 21 | தி | அ9-40 | ஆயி55-26 | சி55ம | திணைவெட்ட |
| 29 | 6 | 22 | செ | பிர 4-27<br>துதி55-21 | மக52-46 | சி60 | கசம்எடுக்கும் |
| 1 | 7 | 23 | புத | திரி56-9 | பூர50-52 | அ60 | ஆடிப்பூரம் |
| 2 | 8 | 24 | வி | சது53_31 | உத்50-1 | ம50சி | உபநயனம்: விதைக்க |
| 3 | 9 | 25 | வெ | பஞ்52-0 | அஸ்50_15 | அ50சி | சர்தவணம் வைக்க |
| 4 | 10 | 26 | ச | சஷ்51-45 | சித்51-43 | ம52அ | சங்கீதம்பாட |
| 5 | 11 | 27 | ஞா | சப்52-46 | சுவா54-26 | சி54ம | தானியம் செலவிட |
| 6 | 12 | 28 | தி | அஷ்54_59 | விசா58-18 | ம58சி | கதிரறுக்க |
| 7 | 13 | 29 | செ | நவ58 20 | அநு 60_0 | சி60 | களஞ்சியம்சேர்க்க |
| 8 | 14 | 30 | புத | தச60-0 | அநு3-20 | சி60 | குளைபோட |
| 9 | 15 | 31 | வி | தச2-36 | கே9 10 | ம3சி | ஆடியமாவாசை |